# 'இலங்கையரான சில்லறை வர்த்தகர்கள்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ☆




# ஈழநாடு

THE BELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 293
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 17 ஷவ்வால் 2 புதன்கிழமை (2-12-70)




## அஞ்சத் தேவையில்லை'

### அமைச்சர் உறுதி

கொழும்பு, செவ். இலங்கையரான சில்லறை வர்த்தகர்கள் அரசாங்கத்துக்கு அஞ்சத் தேவையில்லை என்று உள்நாட்டு வெளிநாட்டுவர்த்தக அமைச்சர் திரு ரி.பி. இலங்கரத்ன உறுதியளித்துள்ளார்.

இலங்கை வம்சாவளியினரின் வர்த்தக சபைக்குழு வர்த்தக அமைச்சரை சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையரான சில்லறை வர்த்தகர்கள் அதிகமான லாபம் சம்பாதிக்காமல்நியாயமான லாபம் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுவாரென திரு. ரி.பி இலங்கரத்ன அவர்களிடம் கூறினார்

இறக்குமதி வர்த்தகத்தை அரசு பொறுப்பேற்பதென்ற அரசாங்கத்தின் முடிவில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாதென்று அமைச்சர் சொன்னார்.

சில்லறை வர்த்தகர்கள் சில பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பதுபற்றி ஆலோசனை செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு சில்லறை வியாபாரிகள் பயப்படவேண்டியதில்லையென்றும் அவர்கள் பாதிக்கப்படமாட்டார்களென்றும் திரு. ரி. பி. கூறினார்.

"பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டுக்கு மொத்த வியாபாரிகளே காரணம் இவர்கள்தான் அரசாங்கம் வர்த்தகத்துறையில் எடுக்கும் புதிய மாற்றங்களுக்கும் காரணம் வெகுவாகப் பாதிக்கப்படப் போபவர்களும் அவர்களே என்று அமைச்சர் தம்மைச் சந்தித்த வர்த்தகசபைக் குழு அங்கத்தவர்களிடம் சொன்னார்.

## செய்மதி வெடித்தது

வாஷிங்டன், டிச.1

அமெரிக்க செய்மதிஒன்று குறித்த இடத்தை அடையாது இடையிலேயே வெடித்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது

தொலைவிலுள்ள நட்சத்திரங்களின் ஆராய்ச்சிக்காக இச்செய்மதி அனுப்பப்பட்டதென்றும் வெடித்து சிதறிய துண்டுகள் ஆபிரிக்காவின் பகுதிகளிலோ, இந்துசமுத்திரத்திலோ விழுந்திருக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

## கைத்தொழில் அபிவிருத்திக்கு

# உள்நாட்டு கனிப் பொருளையே இனி பயன்படுத்தவேண்டும்

## ஆட்சிமன்றத்தில் அமைச்சர் விளக்கம்

கோட்டை, செவ். சகல கைத்தொழில்களும் அரசாங்கத்தின் மூலமே நடைபெறவேண்டும் என்று கைத்தொழில் அமைச்சர் திரு ரி பி சுபசிங்கா கருத்து வெளியிட்டார்.

கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. ரி பி சுபசிங்கா நேற்று ஆட்சி மன்றத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

எதிர்காலத்தில் அரசாங்கத்துறை ஊடாகவே கைத்தொழில்களை அமைக்க அனுமதியளிக்கப்படும். கடந்த ஆண்டுகளில் பெரும் கைத்தொழில்கள் நிறுவ வழங்கப்பட்ட உத்தரவுச்சீட்டுக்கள் ரத்துச்செய்யப்படும், தனியார் துறையிலிருந்து தொழில் நுட்ப உதவிமட்டுமே கைத்தொழில் அபிவிருத்திக்குப் பெறப்படும்.

இந்நாட்டுக்கனிப்பொருள் வளத்தை வைத்தே கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படும் சோவியத் யூனியன், சீனு ஆகிய நாடுகளின் உதவியோடு இம்மூலவளங்களைப் பயன்படுத்தி கைத்தொழில்களை அரசாங்கம் விரைவில் ஆரம்பிக்கும்.

அடுத்த ஐவுளிக் கைத்தொழிலுக்கு மூலப்பொருளான பருத்தியையும் நாட்டில் பெருமளவில் உற்பத்தி செய்ய திட்டம் ஒன்று தீட்...

## 'மின்சார ஊழியருக்கு

## பாப்பரசர் விஜயம்:

## 5,500 பொலிஸார் கடமையாற்றுவர்

கொழும்பு, செவ்வாய் பாப்பரசரின் இலங்கை விஜயத்தையொட்டி அன்று கட்டுநாயக்காவுக்குச் செல்லும் வாகனங்களை கட்டுப்படுத்த மட்டும் 3,540 பொலிசார் கடமையாற்றுவர். நேற்று மாலை இவர்களுடைய அணிவகுப்பு ஒத்திகை ஒன்று நடைபெற்றது.

இவர்கள் இம்மாதம் 2-ந் திகதி காலை எட்டு மணி தொடக்கம் வாகனப் போக்குவரத்தால் பொது மக்களுக்கு எதுவித அசௌ...

இம்மாதம் 3-ந் திகதி மத்தியானத்தோடு நிறுத்தப்படும். தனிப்பட்டவர்களது மோட்டார்கள் இம்மாதம் 4-ந் திகதி மாலை 4 மணியோடு நிறுத்தப்படும். பஸ்கள் மாலை 6 மணியோடு நிறுத்தப்படும்.

மொத்தம் எல்லா நிகழ்ச்சி ஒழுங்குகளையும் நிலைநாட்ட மொத்தம் 5,500 பொலிசார் கடமையாற்றுவர். இதில் 15 பொலிஸ் அதிகாரிகளும், 32 உதவிப் பொலிஸ் அதிகாரிகளும், 104 ...

## திவ்விய ஜீவன சங்க மாநாடு

யாழ்ப்பாணம், புதன் அகில இலங்கை திவ்விய ஜீவன சங்க வருடாந்த மகாநாடு இம்மாதம் 12-ந் திகதி யாழ்ப்பாணம் திவ்வியஜீவன சங்கக் கட்டிடத்தில் நடைபெறும்.

இம் மகாநாட்டையொட்டி ஆரம்பநிகழ்ச்சியாக யாழ். திவ்வியஜீவன சங்கத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தை அகில உலக திவ்வியஜீவன சங்கத்தலைவர் வணக்கத்துக்குரிய சுவாமி சதானந்தாஜி திறந்துவைப்பார்.

இருதினங்கள் நடைபெறும் மகாநாட்டில்சமயப் பெரியார்களும் அரசியல் ...

## கீழ். வெண்மணி படுகொலை

# 8 பேருக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனை

## ஏனையோர் விடுதலை

சென்னை, டிசம்பர் 1 கீழ்வெண்மணிக் கிராமத்தில் ஹரிஜனர் 40 பேர் வீட்டுக்குள் பூட்டி வைத்துத் தீயிட்டுக் கொளுத்திக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் சம்பந்தமாக நடந்த விசாரணையில் 8 பேருக்கு தலா 10 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் ...

யப்பட்டனர். இந்த 40 பேரில் ஏராளமான குழந்தைகளும் பெண்களும் இருந்தனர். இச்சம்பவம் தமிழ்நாட்டில் கொந்தளிப்பான ஒரு நிலையை ஏற்படுத்தியிருந்தது

இப்பயங்கரச்சம்பவத்தையொட்டி 23 பேர் கைது செய்யப்பட்டு நாகபட்டினம் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மின்சார ஊழியருக்கு பாதுகாப்பு வேண்டும்'

யாழ்ப்பாணம், புதன் மின்சாரப் பகுதியில் வேலைசெய்யும் ஊழியர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பாதுகாப்பில்லாததினுல் ஒரு உயிரை இழக்க வேண்டியேற்பட்டது. அதோடு மாநகரசபைக்கும் பணநஷ்டம் ஏற்பட்டுள்ளது. பொறுப்பான உத்தியோகத்தர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.'

யாழ்ப்பாண மாநகர சபையின் விசேஷ கூட்டம் மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா தலைமையில் நேற்று நடைபெற்ற போது திரு. எஸ் நாகராசா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. நாகராசா மேலும் பேசும்போது, மின்சாரக் கம்பங்களில் வேலைசெய்வோர் கைகளில் றப்பர் உறை போடவேண்டியதவசியமென்று கூறினர்.

நகரின் தகுந்த விளக்கேற்றத்திற்கு விசைக்கியர்கள் அவசியமான பாகங்களென மேயர் தெரிவித்ததோடு, இவை முதலில் கன்னுதிட்டி, யாழ்ப்பாணம், நல்லூர், கன்வெட் ஆகிய இடங்களில் போடப்படும் என்ருர்.

நிதிக்குழுவின் சிபார்சுகளையிட்டு ஆலோசனை செய்யப்பட்டபின் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பரிசுத்த பாப்பாண்டவருக்கு யாழ்ப்பாண நகர பிதாக்கள் சார்பில் வாழ்த்துக்களை யாழ்ப்பாண பிஷப் வண. எமலியானுஸ்பிள்ளை மூலம் அனுப்புவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வாழ்த்துச் செய்தியில் உறுப்பினர்கள் நேற்று கையெழுத்திட்டனர்.

முதலாம் வட்டாரத்தில் குறிப்பாக காரைநகர் ரோட்டுக்கருகாமையிலுள்ள காணியில் வீடில்லாதவறிய மக்களுக்கு வீட்டுத் திட்டமொன்றை ஆக்கக்கூடிய விதத்தில் அக்காணியை சுவீகரித்து வீட்டுத் திட்டமொன்றை அமைத்துத்தரும்படி வீடமைப்பு அமைச்சரைக் கேட்டுக் கொள்வதென திரு. என். ரி. செல்லத்துரை கொண்டுவந்த தீர்மானத்தை குழுவிற்கு விடுவதென முடிவு செய்யப்பட்டது.

ளான பருத்தியையும் நாட்டில் பெருமளவில் உற்பத்தி செய்ய திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. எம்பிலிப்பிட்டியா பகுதியல் பருத்திச்செய்கை பெருமளவில் மேற் கொள்ளப்படவிருக்கிறது,

சிறுகைத்தொழில் கூட்டுதாபனம் புனரமைப்புச்செய்யப்படவிருக்கிறது. கைத்தொழில் ஊழியர்களின் நலனில் கைத்தொழில்அமைச்சு கூடியகவனம் செலுத்தும். அவர்களைப் பாதுகாப்பதும் அவர்களது விண்ணப்பங்களை நிறைவேற்றுவதுமே அமைச்சின் முக்கிய நோக்கமாகும்,

தொடக்கம் வாகனப் போக்குவரத்தால் பொது மக்களுக்கு எதுவித அசௌகரியமும் ஏற்படாதவாறு கவனித்துக்கொள்வர்.

சட்டுநாயகாவின் எல்லையாகவுள்ள ஜாஎல, நீர்கொழும், மினுவாங்கொடை, எக்கல ஆகிய பகுதிகளில் போக்குவரத்து பின்வருமாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

மாட்டுவண்டிகள் போக்கு

15 பொலிஸ் அதிகாரிகளும், 32 உதவிப் பொலிஸ் அதிகாரிகளும், 104 பரிசோதகர்களும், 252 உதவிப் பொலிஸ் பரிசோதகர்களும், 199 போக்குவரத்து வாகன விசேட பரிசோதகர்களும் 622 ராணுவ அதிகாரிகளும், 4,850 கான்ஸ்டபிள்களும், 20 பெண் கான்ஸ்டபிள்களும் கடமையாற்றுவர்.

இருதினங்கள் நடைபெறும் மகாநாட்டில்சமயப் பெரியார்களும் அரசியல் பிரமுகர்களும்கலந்துகொள்வார்கள்.

நாட்டின் பல பாகங்களிலுமிருந்து பிரதிநிதிகள் மகாநாட்டுக்கு விஜயம்செய்வார்களென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல் தண்டனை விதிக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் நிலக்கிழார்களுக்கும் விவசாயிகளுக்குமிடையே நடைபெற்ற நிலத்தகராறைத் தொடர்ந்து 1968-ம் ஆண்டு 40 பேர் வீட்டுக்குள் பூட்டி வைத்து தீயிட்டுக் கொழுத்திக்கொலைசெய்

செய்யப்பட்டு நாகபட்டினம் செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுவந்தனர். இவர்களில் 8 பேருக்கு தலா 10 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை அளித்து நாகபட்டினம் செஷன்ஸ்நீதிபதி தீர்ப்பளித்தார். மற்றவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

# விடுதலைக்காக போராடும் நாடுகளுக்கு ரஷ்யா உதவுகிறது

## யாழ். நகரில் சோவியத் தூதர்

யாழ்ப்பாணம், புதன் 'சோவியத் ரஷ்யா உலக நாடுகளின் நட்புறவை வளர்க்கும் அதே நேரத்தில் விடுதலைக்காகப் போராடும்நாடுகளுக்கு தனது ஆதரவையும் உதவியையும் அளித்து வருகிறது' என்று இலங்கையிலுள்ள சோவியத் தூதுவர் திரு. ரஃபிக் ஈசாஞேவ் நேற்று யாழ்ப்பாணத்தில் கூறினர்.

இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தின் யாழ். கிளை ஆதரவில் அதன் தலைவரான உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் சோவியத் தூதருக்கு யாழ். நகரமண்டபத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

சோவியத்தூதர் திரு. ரஃபிக்ஈசாஞேவ் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

'வியட்னும் போன்ற விடுதலைக்காகப்போராடும் நாடுகளுக்கு சோவியத்யூனியன் ஆயுதங்களையும், பொருளாதார உதவிகளையும் அளித்து வருகிறது. முதலாளித்துவ நாடுகள் பிரமிக்கக்கூடிய வகையில் இந்த உதவிகளை எமது நாடு செய்து வருகிறது.

சோவியத் மக்கள் இலங்கையுடன் நேசமாகவும், நட்புறவுடனும் வாழ விரும்புகிருர்கள். இலங்கையில் உருக்கு, டயர் ஆலைகளை நிர்மாணிப்பதற்கு சோவியத் நிபுணர்கள் உதவியளித்து வருகிருர்கள் அத்துடன் எண்ணெவள ஆராய்ச்சி மீன்பிடி, வீடு அமைப்புபோன்றவற்றிலும் இலங்கைக்கு எமது நாடு உதவி அளித்து வருகிறது. எமது நாட்டில் இலங்கை பற்றிய புத்தகங்கள் பல வெளியிடப்படுகின்றன. திரு. வி. பொன்னம்பலம் உட்பட பலர் பேசினர்.

# அணு ஆயுத பரிசோதனையை நிறுத்த ஐ. நா. தீர்மானம்

வாஷிங்டன் டிசம்பர்1 அணு ஆயுதப் பரிசோதனையை உலகநாடுகள் நிறுத்தவேண்டுமென ஐ. நா சபை இன்று தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்துக்கு ஆதரவான 80 நாடுகள்வாக்களித்தன எந்த நாடும் எதிர்த்து வாக்களிக்கவில்லை14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவின்லை,

சோவியத் யூனியன் ஆதரித்துவாக்களித்துள்ளது.

ஆனல் கடந்த ஆண்டு இது வாக்களிக்கவில்லை

தீர்மானத்தில் தற்பாதுகாப்புக்காகவோ தாக்குவதற்காகவோ அணு ஆயுதத்தை பாவிக்ககூடாதென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

— —

## தீர்மானம் வரவில்லையாம்

யாழ்ப்பாணம், புதன் புங்குடுதீவு ஸ்ரீ இராசராஜேஸ்வரி வித்தியாசாலைப் பெற்ருர் ஆசிரியசங்கத்தின் 30 வது வருடாந்தக் கூட்டம் முறைப்படி நடைபெற்றதோயாழிய அது 30 வருடங்களின் பின் கூடியதல்ல என்றும் அக்கூட்டத்தில் சிங்களத்தை இஷ்டபாடமாகக் கற்பிக்க வேண்டும் எனத்தீர்மானிக்கவில்லையென்றும், அப்படியானவொரு தீர்மானம் கூட்டத்தில் கொண்டுவரப்படவேயில்லை என்றும், திரு சி. சின்னத்துரை ஆசிரியருக்குச் சேவைநலம் பாராட்டு விழாவைக்கவேண்டுமெனப் பேசப்பட்டதேயன்றி பாராட்டவேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை யென்றும் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய பிரஸ்தாய வித்தியாசாலை அதிபர் திரு. வை. கணபதிப்பிள்ளை அறியத்தருகிருர்.

1-வது 'டெஸ்ட்'

# இங்: 464

## ஆஸ்: 56—2

பிரிஸ்பன், டிச 1 இங்கிலாந்துக்கும், ஆஸ்திரேலியாவுக்குமிடையில் நடைபெறும் 1-வது கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டியின், 4-வது நாளான இன்று இங்கிலாந்துக் கோஷ்டி மதிய போசனத்துக்கு சற்றுபின் தனது முதலாவது இன்னிங்ஸில் எல்லாவிக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 464 ஒட்டங்களைப் பெற்றது. இதில் வீரர் டொலிவேரா கடைசி நேரத்தில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 57 ஓட்டங்களைப் பெற்ருர்.

இங்கிலாந்துக் கோஷ்டி, தனது முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியாக் கோஷ்டியைக்காட்டிலும் 31 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றது குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் மொத்தம் 433 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆஸ்திரேலியாக் கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸில், இன்றைய ஆட்டம் முடிவடையும் போது பலம்கொண்ட இரு விக்கெட்டுகளை இளந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. 1-வது இன்னிங்ஸில் 207 ஓட்டங்களைப் பெற்ற ஸ்ரக்புல் இம்முறை 8 ஓட்டங்களுடனும், ஷெப்பில் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர் காப்டன் லோரி 29 ஓட்டங்களுடனும், வோல்டஸ் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருக்கின்றனர்.

1-வது டெஸ்ட் போட்டியின் இறுதிநாள் நாளையாகும்.

# உப்பை மூலப் பொருளாகக் கொண்ட கைத்தொழில்கள்

## கூட்டுத்தாபனம் ஆலோசனை

கோட்டை, புதன் வீட்டுத் தேவைக்கு வேண்டிய உப்பை உற்பத்தி செய்வதுமன்றி உப்பை அடிப்படையாகக் கொண்ட பல ரசாயனக் கைத்தொழில்களை நிறுவ உப்புக் கூட்டு ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

வீட்டுப்பாவனைக்காக உப்பு உற்பத்தியை அதிகரிப்பதோடு உப்பை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை நிறுவவும் உப்பு உற்பத்தி அதிகரிக்கப்படவுள்ளது. அதிகரிக்கப்பட்ட இந்த உப்பை அடிப்படையாகக்கொண்டு இரசாயனக் கைத்தொழில்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். யாழ்ப்பாணக் குடாவில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க உப்புக் கூட்டு ஸ்தாபனம் திட்டமிட்டுள்ளது.

இன்று உப்புக் கூட்டு ஸ்தாபனம் தனது 13 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடுகிறது.

# தோட்டப் பாடசாலைகளை பொறுப்பேற்பதில் தீவிரம்

கொழும்பு, செவ்வாய் 600க்கு மேற்பட்டதோட்டப் பாடசாலைகளை பொறுப்பேற்கும் திட்டத்தைசெயல் படுத்துவது பற்றி கல்வி அமைச்சு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. சிம்மாசனப் பிரசங்கத்தின் போது தோட்டப் பாடசாலைகள் பற்றி அளிக்கப்பட்ட வாக்குறுதியின் மூலம் நிறைவேற்றப்படுமென அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தோட்டப் பாடசாலைகளை பொறுப்பேற்பதற்காக புதிய சட்டம் கொண்டுவரத் தேவையில்லை. 1961ம் ஆண்டு தனியார் பாடசாலைகளை பொறுப்பேற்பதற்கு கொண்டுவரப்பட்ட சட்டத்தின்கீழ் இப் பாடசாலைகளும் பொறுப்பேற்கப்படும் என்று தெரிகிறது.

தோட்ட மனேச்சர் நிர்வாகத்தின்கீழ் இப் பாடசாலைகளின் வசதி குறைவு காரணமாக தோட்டத்திலுள்ள தொழிற்சங்கங்கள் இப்பாடசாலைகளை பொறுப்பேற்கும்படி வற்புறுத்திவந்துள்ளன.

இவைகளுக்கு அரசாங்கம் மான்யம் வழங்கப்பட்ட போதிலும் இப் பாடசாலைகள் பழைய நிலையிலேயே இருந்து வருகின்றன.

இந்தப் பாடசாலைகளில் அநேகமாக 5-ம் வகுப்பு வரையில்தான் படிப்பிக்கப்படுகின்றது. இங்குள்ள ஆசிரியர்கள் பெரும்பாலும் பயிற்றப்படாதவர்கள். தளபாடங்களும் திருப்திகரமாக இல்லை. (சி பி ஏ)

— —

## நியாய விலை கடைகள்

கொழும்பு, செவ்வாய் பாவனைப் பொருட்கள் விற்பனைக்கென நாடு முழுவதும் முன்னூறு நியாய விலைக் கடைகள் திறக்கப்படும். தனிப்பட்டவர்கள் பொருட்களைப் பதுக்குவதை இதனுல் தடுக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (சி. பி. ஏ.)

# வெளியூர் மாணவருக்கும் பாடசாலைகளில் இடம்?

கோட்டை, செவ். அடுத்த ஆண்டிலிருந்து பெரிய பாடசாலைகள்பல இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள மாணவர்களுக்கும் திறந்து விடப்படும்.

ரோயல், ஆனந்தா, நாலந்தா போன்ற பெரிய பாடசாலைகளுக்கு இந்த உத்தரவு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இப்பொழுது பாடசாலைகள் எங்கு உள்ளனவோ அப்பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு மாத்திரமே அனுமதியளிக்கும் நடைமுறையிருந்து வருகின்றது. புதிய ஏற்பாட்டின்படி 50 சதவீதமான இடங்கள் பெரிய பாடசாலைகளில் வெளியூர் மாணவர்களுக்கும் ஒதுக்கப்படும் என்று தெரிகின்றது. (சி.பி.ஏ)

சந்தேக நபர்கள்

# இருவர் றிமாண்டில்; ஒருவர்தேடப்படுகிருர்

அம்பன், செவ்வாய் வியாபாரிகளை ஏமாற்றி போலி வலைச்சாயத்தையும், போலி கிருமிநாசினிகளையும் விற்பனை செய்ததாகவும் விற்க முயன்றதாகவும், கொழும்பு கம்பெனியொன்றின் பிரதிநிதியென கூறி ஏமாற்றியதாகவும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட எஸ். ஜே. சத்தியநாதன், எஸ். ஜெயசூரியா ஆகியோர் றிமாண்டில்வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை முல்லைத்தீவு பொலிஸார், முல்லைத்தீவு நீதிபதி ஜனுப் ஏ எம் ஐ முன்னிலையில் ஆஜர் செய்தபோது ஒவ்வொருவரையும் தலா 200 ரூபா பிணையில்செல்ல அனுமதித்த நீதிபதி 28-ம் தேதி மீண்டும் ஆஜராகும்படி தெரிவித்த போது, முல்லைத்தீவு சிலாபம், பருத்தித்துறை பொலிஸாருக்கு இவர்களைப்பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனைத்தொடர்ந்து இவர்களை றிமண்டில்வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பொலிஸ் கோர்ட்டில இவர்கள் இருவரும் இம்மாதம் 11-ம் தேதி ஆஜர்செய்யப்படவிருக்கின்றனர். சிலாபம் பொலிஸ் கோர்ட்டில் இம்மாதம் 8ம் தேதி ஆஜர் செய்யப்படுவார்கள் இப்புகாரைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் இளவாலையைச் சேர்ந்த இமானுவேல் என்பவரையும் பொலிஸார் தேடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

சாரதி!

கார் ஓட்டுவதற்கு சாரதி தேவை. 5 வருட அனுபவம் விரும்பத்தக்கது. எதிர்பார்க்கும் சம்பளம், சான்றிதழ் முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2540, C/o 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2540

### விற்பனைக்கு

நயினாதீவிலுள்ள பள்ளி வாசலுக்கு அண்மையில் சுமார் 25 பரப்பு வருமான தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பென்சி பெலஸ், மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2543

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 2—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 பெண்ணுலகம், 7-00 திரைகானம், 7-15 விசேஷ நிகழ்ச்சி — பாப்பரசர் விஜயம், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

## ஏல விற்பனை

46 கலன் வெற்று எண்ணெய்த் தகரங்கள், வெற்றுப் பேணிகள், சீமெந்து உறைகள், பாவித்த லொறி ரயர்கள், பழுதடைந்த வாளிகள், மண்வெட்டிகள், கோடரிகள், வெற்றுப் போத்தல்கள், பழுதடைந்த ஒற்றைச் சில்லுச் சேற்று வண்டிகள் முதலிய பொருட்கள் 7-12-70 காலை 10-30 மணியளவில் யாழ்ப்பாண மாநகரசபைப் பொதுக் களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். மேலதிக விபரங்களைப் பொதுக்களஞ்சியப் பொறுப்பாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.
2575

## டிப்ளோமா பயிற்சிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ். வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சே சிவராஜா கல்வி டிப்ளோமா பட்டப் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு வருட காலம் இவர் பயிற்சிபெறுவார். வடமாகாண விஞ்ஞான சங்கத்தின் உபசெயலாளரான இவர் யாழ். பட்டின ஆசிரியர் சங்கத்தின் உபசெயலாளரும் வ. மா. ஆ. சங்கச் செயற்குழு உறுப்பினரும், யாழ். இலக்கிய வட்ட இணைச்செயலாளருமாவார்.

......

## ஜனவரியில் திறக்கப்படும்

மாத்தறை, செவ்.

மாத்தறை மெதவத்தை சிங்கள ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஜனவரி 1ந் திகதி திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இப்பயிற்சிக் கலாசாலை சுமார் 1,57,000 ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## பகிரங்க அறிவித்தல்

### பண்டத்தரிப்பு கிராமச் சபை

## இறைவரி நிலுவைகள்

பண்டத்தரிப்புக் கிராமச் சபையின் எல்லைக்குள் இருக்கும் வரியிறுப்பாளர்களுக்கு இறுதி முறையாக அறியத் தருவது.

1962-ம் ஆண்டு தொடக்கம் 1970-ம் ஆண்டு வரையிலும் உள்ள இறைவரி நிலுவைப் பணத்தை இவ்வறிவித்தல் கண்ட 15 நாட்களுக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். செலுத்தத் தவறின் குறிப்பிட்ட ஆதனத்துக்குள்ளிருக்கும் அசைவுள்ள பொருட்களைக் கைப்பற்றி பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதையும், விற்கும் பணம் தங்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைப் பணத்திற்கு குறைவாக கிடைக்குமேயானால் குறிப்பிட்ட ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்று பணம் அறவிடப்படும் என்பதையும் இத்தால் மன வருத்தத்துடன் அறியத்தருகிறேன்.

1962-ம் ஆண்டு தொடக்கம் எமது கிராமசபைக்கு 45,000/- ரூபா வருமதியுள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்.

ஆகவே இறைவரி நிலுவைகளை செலுத்தி சபையுடன் ஒத்துழைக்கும்படி தயவன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

சி. சி. கனகசபாபதி ஜே பி,
தலைவர்,
கிராமச்சபை,
பண்டத்தரிப்பு

கிராமச் சபை,
பண்டத்தரிப்பு.
1-12-70. 2576

## இரசாயன கூட்டு ஸ்தாபனத்துக்கு வெற்றி

கிளிநொச்சி, செவ்.

இம்மாதம் 24ம் திகதி ஜெருட்றிக்கோ மைதானத்தில் நடைபெற்ற சின்னத்துரை வெற்றிக்கிண்ணத்துக்கான முதலாவது உதைபந்தாட்டப் போட்டியில்; பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனக் கோஷ்டியினரும் ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன கோஷ்டியினரும்

கம்பளையில்

## யாழ். வீரர்களுக்குக்கிடைத்த வெற்றியும் தோல்வியும்

யாழ்ப்பாணம், புதன்

கம்பளைக்குச் சென்றிருந்த யாழ். மாவட்டப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டி வெற்றி, தோல்வியுடன் திரும்பியுள்ளது.

கம்பளையில் நடைபெற்ற அகில இலங்கை மாவட்டப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிகளுக் கிடையிலான 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காகச் சென்ற யாழ் கோஷ்டி. முதல் போட்டியில் வெற்றி பெற்றது.

யாழ். கோஷ்டிக்கும், திருமலைக் கோஷ்டிக்குமிடையில் முதல் நடைபெற்ற மோதலில் இரு கோஷ்டிகளும் ஆட்டம் முடிவடையும் போது தலா 3 3 கோல்களைப் பெற்றிருந்தன. இதன்பின் மத்தியஸ்தரால் இரு கோஷ்டிகளுக்கும் தலா பத்து 'பெனல்டி' உதைகள் வளங்கப்பட்டது. இதில் திருமலைக் கோஷ்டி 2 புள்ளிகளையும், யாழ். கோஷ்டி 5 புள்ளிகளையும் பெற்றமையால், யாழ. கோஷ்டி அடுத்த போட்டியில் பங்கு பற்றுவதற்கு தகுதி பெற்றது.

யாழ். மாவட்டக்கோஷ்டி இரண்டாவது போட்டியாக கண்டி மாவட்டப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டியுடன் மோதியது.

இப் போட்டியில் இரு கோஷ்டிகளும் மிகச் சிறப்பாக விளையாடின. இடைவேளையின் போது இரு கோஷ்டிகளும் தலா 2-2 கோல்களைப் பெற்றிருந்தன. இடைவேளையின் பின் கண்டிக் கோஷ்டி மேலும் ஒரு கோலைப் போட்டமையால், ஆட்டமுடிவில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டி 3-2 கோல்களால் தோல்வியடைந்தது. (தே. நி)

## சம்மாந்துறையில் இன்று நடைபெறும் விளையாட்டு விழா

சாய்ந்தமருது, செவ்.

சம்மாந்துறை சுவீட்மஜீட் விளையாட்டுக் கழகம் கழகங்களுக்கிடையே அண்மையில் நடாத்திவந்த கரபந்தாட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இம்மாதம் 2-ம் திகதி நடைபெறுகின்றது

காலஞ்சென்ற நிந்தவூர்த் தொகுதி ஆட்சி மன்றஉறுப்பினர் ஜனாப், எம் ஐ. அப்துல் மஜீத்தின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக இச்சுற்றுப் போட்டிகள் கடந்த மூன்று மாதகாலமாக நடைபெற்று வந்தது

சம்மாந்துறை டயனமட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்பரிசளிப்பு விழாவில் பொத்துவில் ஆட்சி மன்ற உறுப்பினர். ஜனாப், எம், ஏ, அப்துல் மஜீத் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஆர். பிரட்மன் வீரக்கூன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக்கலந்து கொள்வர்.

விழாவின் ஆரம்பமாக உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி நடை...

## பாப்பரசரை தரிசிக்க இன்று பயணம்

கிளிநொச்சி, புதன்

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பரிசுத்த பாப்பரசரின் தரிசனத்தை பெறுவதற்காக இங்குள்ள கத்தோலிக்க மக்கள் கொழும்பு செல்லவுள்ளனர்.

250 பேர் அடங்கிய இக் கோஷ்டியினர் இன்று புகையிரதமார்க்கமாகப் பிரயாணம் மேற்கொள்கின்றனர்.

......

## விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் இல்லை

நாவலப்பிட்டி, செவ்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் இப்பகுதியில் கூடுதலாகவேயுள்ளது. இங்குள்ள வர்த்தகர்கள் விலைக் கட்டுப்பாட்டு விதிகளைப் பற்றிக் கவனிப்பதேயில்லை. இந்தப் பகுதியில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளும் இல்லை. இதனால் பொதுமக்கள் தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக புகார்

## வேலணைச் செய்திகள்

வேலணை செவ்வாய்

வேலணை கிராமசபையின் 71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு நிறைவேறியது.

கிராமசபைத் தலைவர் திரு. க சதாசிவம் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின்போது திரு சி இராமலிங்கம் பிரேரிக்க திரு. பு நவசிவாயம் அனுசரித்ததையடுத்து நிறைவேற்றப்பட்டது.

0 0 0

### தச்சுவேலை பயிற்சி நிலையம்

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளியே மாற்றப்படவிருக்கும் தச்சுவேலை பயிற்சி நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றநடவடிக்கை எடுக்கப்படுவதாகத்தாம் அறிவதாகவும், இந்நிலையத்தை ஊர்காவற்றுறைப்பகுதிக்கு மாற்றுமாறும் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி தொழிற்திணைக்கள ஆணையாளரைக்கேட்டுள்ளார்.

புங்குடுதீவு மக்கள் தங்களுக்கு ஒரு தச்சுப்பயிற்சி நிலையம் வேண்டுமென பல ஆண்டுகளாகக் கேட்டுவருகின்றனர். இம்மக்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கு இந்த தச்சுவேலை பயிற்சி நிலையத்தை புங்குடுதீவில் நிறுவுக என தமது கடிதத்தில் திரு. இரத்தினம் எம். பி. கேட்டுள்ளார்.

0 0 0

### வீட்டுத்தோட்டப் போட்டி

தீவுப்பகுதியில் உணவு உற்பத்தி இயக்கத்தைச் சிறந்த முறையில் உற்சாகப்படுத்தி சகல மக்களையும் இவ்இயக்கத்தில் பங்குபற்றச் செய்யும்நோக்கத்துடன் வீட்டுத் தோட்டப்போட்டி தீவுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது. 70-71-ம்ஆண்டு காலபோகத்தில் நடைபெறும் இப்போட்டியில் கமத்தொழில் நாட்டமும் உற்சாகமும் உடையவர்கள் தங்கள் மனுக்களை 10-12-70 க்குப் பிந்தாமல் தீவுப்பகுதிக் காரியாதிகாரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி காரியாதிகாரி, கிருஷிக போதனாசிரியர், கமத்தொழில் பெரும்பாக

## 'அரசியல் சாக்கடையில் கால் வையாதீர்'

### மாணவருக்கு ஜனார்த்தனம் அறிவுரை

சுழிபுரம், செவ்வாய்

''நாளைய மன்னர்களாக விளங்கப்போகும் மாணவர்கள், தங்கள் ஆரம்ப வாழ்வை நன்கு செப்பனிட வேண்டும். அரசியல் என்ற சாக்கடைச் சேற்றில் கலந்து மாணவர்கள் தங்களைப் பிசக்கிக் கொள்ளக்கூடாது. ஆரம்ப காலத்தில் அரசியலில் புரண்டவர்கள் தம்மைத் தாமே பாழ்படுத்திக் கொண்டனர். இளமைப் பருவம் கல்விக்குச் சிறப்புடைய காலமாகும். நன்ருகப் படிக்கவேண்டும்! அதன்படி வாழ்வை அமைக்கவேண்டும்.''

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மாணவ மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றிய உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இரா. ஜனார்த்தனம் குறிப்பிட்டார்.

இளமைக் காலம் கட்டுப்பாட்டுடன் ஒழுங்காக அமைக்கப்படுமானால் பிற்காலம் பெரும் சிறப்புடன் வாழலாமென்றும், அரசியல் விஷயங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, கல்வியைக் கற்க வேண்டுமென்றும், வேறு வழிகளில் அறிவைப் பயன்படுத்தாது, கல்வியில் பயன்படுத்தி, நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ வேண்டுமென்றும் திரு. ஜனார்த்தனம் கூறினார்.

## 'பேச்சினால் சோஷலிஸத்தை பெற்றுவிட முடியாது'

— விவசாய அமைச்சர்

கண்டி, செவ்.

'பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்கங்கள், மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கடுமையாக உழைத்து தங்கள் கடமைகளைப் பொறுப்புணர்ச்சியோடு செய்தால்தான் உண்மையான சோஷலிசத்தை நாம் அடையலாமேயன்றி வெற்றுப் பேச்சால் சோஷலிசத்தை அடைந்துவிட முடியாது'

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சங்கராமயாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் இக் கூட்டத்தில் காலஞ் சென்ற பேராசிரியர் திரு கே. என். ஜயதிலகவின் ஞாபகார்த்தமாக அரசமரக்கன்றொன்றை நாட்டினார்.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஈ. ஓ. ஈ. பெரேரா, வண. சிறி சுமண திஸநாயக்கதேரோ வண. டலதெனயா தம்மதாசி நாயக்க தேரோ ஆகியோரும் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

## இரவு 9 மணி வரை கடைகள் திறந்திருக்கும்?

கோட்டை, செவ்.

வர்த்தகவிடுமுறைகளையும் போயா விடுமுறைகளையும் தவிர்ந்த ஏனைய வியாபார நாட்களில் இரவு 9 மணி வரை பாவனையாளர்கள் பொருட்களை வாங்கக்கூடிய வசதிகள் ஏற்படலாமெனத் தெரியவருகிறது. கடைகள் காரியாலயங்கள் பற்றிய திருத்த மசோதா செனட் சபையில் நிறைவேறியதும் இதுசாத்தியமாகலாம்.

தொழில் அமைச்சர் இதற்கான அறிவித்தலை அரசாங்க வர்த்தமானியில் விரைவில் வெளியிடுவார் எனத் தெரி

### உத்தரவின்றி வலைகளை வாங்கவோ விற்கவோகூடாது

யாழ்ப்பாணம், புதன்

'பாஷையூர் சிறகு வலைத் தொழிலாளர் பிறவூர் தொழிலாளிகளிடமிருந்தோ அன்றேல் உள்ளூர் தொழிலாளியிடமிருந்தோ வலைகளை வாங்கவோ அல்லது விற்கவோ அனுமதிவழங்கப்படவில்லை அப்படி ஓர் நிலைமை ஏற்படின் அதை சங்க உத்தரவோடு செய்யவேண்டும் அதைமீறி நடப்பவர் தண்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,
ஸ்பை இன் ரேம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்பை இன் ரோம்

(SPY IN ROME)- ஹிந்தி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா —அசோகன் நடித்த

## மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர் — சுந்தரராஜன் வாணிஸ்ரீ-சந்திரகாந்தா நடித்த

## நேர் வழி

இரண்டு தினங்கள் மட்டும்

## வெலிங்டன்

யாழ்ப்பாணம்

தினசரி 2-30, 6-30, 10-00

போயா நாட்கள் 10-30 மெற்னி






சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி

அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி

மற்றும் பலர் நடித்த

## உயர்ந்த மனிதன்

கெப்பிட்டல் பிளாஸா மைலன்

மற்றும் 4-ந் திகதி முதல்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

திரைகளில்

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

முத்துராமன் — வாணிஸ்ரீ

மற்றும் பலர் நடித்த

## கண்ணன் என் காதலன்


தாட்டப் போட்டியில்; பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனக் கோஷ்டியினரும் ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன கோஷ்டியினரும் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற மோதலில் இரசாயனக் கூட்டுத்தாபனக் கோஷ்டியினர் 4—5 கோலால் வெற்றியீட்டினர். திரு. கே. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

சாய்ந்தமருது, செவ்

மட்டக்களப்பு சென் மேரிஸ் பாடசாலையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றி வந்த திரு. சி. அரசரத்தினம் என்பவரின் திடீர் இடமாற்றத்துக்கு கிழக்கிலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் கல்வி அமைச்சரிடம் தமது எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளன.


### ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 10-00

போயா நாட்கள் 2-30

சிவாஜி—பத்மினி நடித்த

### தெய்வப் பிறவி

### வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

சிவாஜி—பத்மினி நடித்த

### தில்லானா மோகனும்பாள்

2nd to 14th

MANOHARA

Jaffna

Daily 4-45, 7 & 9-45 p.m

Poya days 4 shows

Michael Caine

Noel Coward

in

"THE ITALIAN JOB"

(Panavision-color)

Passes & concessions suspended for one week

Telephone- 485

REGAL

Jaffna

Daily 4-45, 7 & 9-45 p.m.

Poya days 4 shows

Gene Barry

in

MAROC 7


உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி நடைபெறும் சம்மாந்துறைமுஸ்லிம் மகாவித்தியாலய விளையாட்டுமைதானத்தில் நடைபெறும் இச் சுற்று இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று "ஏஸ்" விளையாட்டுக் கழகமும் நிந்தவூர் வை. எஸ். எஸ். ஸி. விளையாட்டுக்கழகமும் மோதும் இதே நேரம் நடைபெறும் கரபந்தாட்ட கண் காட்சிப் போட்டியில் அம்பாறை ஜி. ஓ. டி. கோஷ்டியும் மட்டக்களப்பு விளையாட்டுக்கழகக் கரபந்தாட்டக் கோஷ்டியும் பங்கு பற்றும்

உதைபந்தாட்ட, கரபந்தாட்ட இறுதிப் போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டுக்கழகத்துக்கு பரிசளிப்புவைபவத்தில் சுவீட் மஜீத்வெற்றிக் கேடயத்தை அரசாங்க அதிபர் வழங்குவார்.

## சின்னத்துரை வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டம்

கிளிநொச்சி, செவ்.

கிளிநொச்சி விளையாட்டுச் சபையினரின் ஆதரவுடன் சின்னத்துரை வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் சென்ற 24ம் தேதி ஆரம்பமாயின. 1970ம் ஆண்டுக்கான இப்போட்டியில் இரசாயனக் கூட்டுத்தாபன பொழுது போக்குக் கழகம் கிளிநொச்சி அரசாங்க ஊழியர் விளையாட்டுக் கழகம், அருணோதயா விளையாட்டுக் கழகம், நீர்ப்பாசனஇலாகா விவசாயப்பாடசாலை, உப்பு கூட்டுத்தாபன விளையாட்டுக் கழகங்கள் ஆகியன பங்கு பற்றுகின்றன.

இப்போட்டிகள் 'றெட்றிக்கோ' மைதானத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

## விஷமிகள் சேஷ்டை

நாவற்குழி, செவ்வாய்

நாவற்குழி கிராம முன்னேற்றச் சங்கத்திற்குச் சொந்தமான நெசவு நிலையத்தில் பல நூற்றுக்கணக்கான பெறுமதியுள்ள, நூல்களையும், உபகரணங்களையும் விஷமிகள் சிலர் சேதப்படுத்தியுள்ளதாக நிலையப் பொறுப்பதிகாரி திரு க. சங்கரப்பிள்ளை சாவகச்சேரி பொலிஸ் நிலயத்தில் புகார் செய்துள்ளார். கம்பிவலைகள் ஊடாக தறியிலிருந்த நூல்கள் அறுக்கப்பட்டன.

டுப்பாட்டு அதிகாரிகளும் இல்லை. இதனால் பொதுமக்கள் தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளனர்.

## 30,000 பங்கீட்டு அரிசிப்புத்தகங்கள் கையளிப்பு

கோட்டை, செவ்வாய்

இரண்டாவதுபடி அரிசி வழங்க ஆரம்பித்ததிலிருந்து 30,000 பங்கீட்டரிசிப் புத்தகங்கள் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன என வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## திருடமுயன்றுராம்

பருத்தித்துறை, செவ்.

நேற்று முன்தினம் நள்ளிரவில் வீடொன்றில் திருட முயன்ற ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். அல்வாய் தெற்கைச் சேர்ந்த ஆசிரியர் சு. கணபதிப்பிள்ளை வீட்டில் திருடமுயற்சித்த இந் நபர் இவ்வாறு பிடிபட்டார் தமது பெயரையோ ஊரையோ கூற மறுத்தாராம். இவரை அயலவர் பருத்தித்துறைப் பொலிசில் ஒப்படைத்தனர்

## கந்தளாய் ப. ச. உறுப்பினர்

கந்தளாய், செவ்வாய்

கந்தளாய் பட்டின சபையின் புதிய உறுப்பினர்களாகச் சபையின் 7 வட்டாரங்களிலும் முறையே திருவாளர்கள் எஸ் கனகரட்னம், எச் எம் எஸ் ஹேரத்: எம் எச் மொகமட், ஐ ஏ ஜேமிஸ், கே ஜி பிரேமதாச, எம் ஏ ஆரியவன்ச, எஸ் பியதாச ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## உத்தியோகத்தர் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

தேசிய அரசாங்க சுகாதார சேவைத்தொழிலாளர் சங்கப்பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்! தலைவர்: திரு. சீ. செல்லத்துரை, உபதலைவர் திரு. எஸ். சற்குணநாதன், காரியதரிசி: திரு. க. கிருஷ்ணராசா, உப காரியதரிசி: திரு. ச. கணேஸ். 5பேர்கொண்ட நிர்வாக குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

(கு.வி.ம)

வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி காரியாதிகாரி, கிருஷிக போதனாசிரியர், கமத்தொழில் பெரும்பாக உத்தியோகத்தர்கள் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றும் இப்போட்டியின்போது தோட்டச் சுகாதாரம், ஊக்கமான பயிர்ச்செய்கை, பொருளாதார முறையில் சிக்கனமாக நிலத்தைப் பண்படுத்தல் போன்றவை கவனிக்கப்படும் என்று தெரிகிறது

வோ அனுமதிவழங்கப்படவில்லை அப்படி ஓர் நிலைமை ஏற்படின் அதை சங்க உத்தரவோடு செய்யவேண்டும் அதைமீறி நடப்பவர் தண்டனைக்குள்ளாவர். அப்படியானால் வலைகளைப் பறிமுதல் செய்யவும் சங்கம் முடிவு செய்யும்வலைகளில் பெயரும் வள்ளத்து இலக்கமும்வீட்டு இலக்கமும், பொறிக்கப்பட வேண்டும்'

இவ்வாறு பாஷையூர் புனித அந்தோனியார் கடல் தொழிலாளர் சங்கம்தொழிலாளர் நலன் கருதி பொது மக்கள்ஒத்துழைப்புவேண்டி ஓர் அறிக்கையை சிறகுவலைத் தொழிலாளர்க்கு விடுத்துள்ளது. (கு.வி.ம)

தொழில் அமைச்சர் இதற்கான அறிவித்தலை அரசாங்க வர்த்தமானியில் விரைவில் வெளியிடுவார் எனத் தெரிகிறது. இப்போதைய சாப்புச் சட்டப்படி கடைகள் இரவு 6 மணிக்கு மூடப்பட வேண்டும்.


விரைவில் வெளிவருகின்றது

## 'ஈழநாடு' தினக்குறிப்பு 1971

முற்றிலும் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

6 பக்கங்கள் கொண்ட தகவல்கள்

★ அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகள்

★ போயா விடுமுறைகள்

★ பாடசாலை தவணை விடுமுறைகள்

★ உலக - இலங்கை புவியியல், குடியியல், சரித்திரம் சம்பந்தமான குறிப்புகள்

★ தபால் தந்தி விகிதங்கள்

★ பஸ், புகையிரத, விமான சேவை நேர அட்டவணை

★ கிரகங்களின் அட்டவணை

[ இன்னும் பல குறிப்புகள் ]

விலை: ஒன்று 1 ரூ. 50 சதம்

வியாபாரிகளுக்கு கழிவுண்டு,

'ஈழநாடு' (வர்த்தக அச்சகப் பகுதி)

த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன வேற்றுமை காட்டும் நாட்டுக்கு ஐ. நா. வில் இடமில்லை

## பொதுச்சபை நிறைவேற்றியுள்ள புதிய தீர்மானம்

நியுயோர்க், டிசம். 1

உலகின் எந்தப் பகுதியிலானாலும் இன வேறுபாடோ, அதை ஒட்டிய ஏற்றத் தாழ்வுகளோ இருக்கக் கூடாதென வலியுறுத்தும் தீர்மானமொன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டது.

உலகிலுள்ள எந்தப் பகுதியிலானாலும் இன ரீதியிலான வேறுபாடுகளோ அல்லது அதையொட்டிய ஏற்றத்தாழ்வுகளோ இருக்கக்கூடாது. குறிப்பாக தென் ஆபிரிக்கா. பாலஸ்தீனம், ரொடீசியா. போத்துக்கல் எல்லைப்பகுதிகளில் இவ்வேறுபாடுகள் காட்டப்படுவதை இத்தீர்மானம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இப்படியான இன வேறுபாடுகள் காட்டும் நாடுகள் ஐ. நா. வில் அங்கம் வகிப்பதை அனுமதிக்கக்கூடாதென இத்தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது. இத்தீர்மானம் ஆதரவாக 70 வாக்குகளும் எதிராக 12 வாக்களும் பெற்று நிறைவேறியது. 28 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

## போர் ஓய்வு நீடிக்க இஸ்ரேல்வாபஸாகவேண்டும்

கெய்ரோ. டிசம்பர் 1

இப்பொழுது நடைமுறையில் இருக்கும் போர் நிறுத்த ஓய்வை மேலும் நீடிக்கலாமென்றும் கைப்பற்றப்பட்ட எல்லைப் பிரதேசங்களிலிருந்து குறிப்பிட்டகால அவகாசத்தில் அப்பகுதிகளிலுள்ள இஸ்ரேல் ராணுவம் வெளியேறவேண்டும் என்றும் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி திரு. அன்வார் சதாத் தெரிவித்தார்.

திரு. சதாத் சூயஸ் கால்வாயின் தென் பகுதிக்குச் சென்று அப்பிரதேசத்தைப் பார்வையிட்டார்.

இதே நேரத்தில் சூயஸ் கால்வாய் பகுதியில் எகிப்து ஏவாயுத நிலையங்களை நிறுவிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கூலிப்படையினர் 50 பேர் கொல்லப்பட்டனர்

### 100 பேர் கைது

கொனக்கிரி, டிச. 1

கினியின் வடமேற்குப் பகுதியில் அரசாங்கப்படைகளுக்கும் கூலிப்படைகளுக்குமிடையே நடந்த சண்டையில் 50 பேர் கொல்லப்பட்டனர். கூலிப்படைகளைச் சேர்ந்த 100 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் சிறு சிறு சண்டைகள் ஆங்காங்கே நடந்து கொண்டி

## ஜென. கொவான் வரமாட்டார்

லண்டன், டிசம்பர் 1

காமன் வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் நைஜீரியப் பிரதமர் ஜெனரல் கொவான் கலந்துகொள்ள மாட்டார்.

## கி. சேவையாளர் தகைமை விதிகள் தளர்த்தப்படும்

கோட்டை, செவ்.

கிராமசேவையாளர் தேர்வுக்கு விதிக்கப்பட்டிருந்த தகைமைகள் இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கின்றன. தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் தேர்வுக்குள்ள தகைமை போல, இரு பாடங்களில் திறமைச்சித்தியும், மொத்தம் ஆறு பாடங்களில் எஸ். எஸ். ஸி. அல்லது ஜீ. ஸி. ஈ, (சாதாரணம்) பரீட்சையில் சித்தியும் அடைந்திருந்தால் போதுமானது. கிராமப்புறங்களில் கல்வி கற்கும் மாணவர்களும் இச்சேவையில் சேர்ந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்துமுகமாகவே பொதுத்துறை. உள் நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இந்நடவடிக்கையை எடுத்துள்ளார்.

## கறிவகை விலை அதிகரிப்பு

பருத்தித்துறை, செவ்வாய்

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக இப்பகுதிக் கடற்றொழிலாளர் எவரும் கடலுக்குப் போகாமையால் மீன் விலை அதிகரித்துள்ளது. காய்கறிகள் விலையும் ஏறியுள்ளது. நாற்றுப்போடப்பட்ட கத்தரி, மிளகாய்க் கன்றுகள் அழிந்துவிட்டன. தாழ்ந்த சில பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அழிவுகள் ஏற்பட்ட பகுதிகளைப் பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் பார்வையிட்டுவருகிறார்.

## வருடாந்தக் கூட்டம்

# மட்டக்களப்பு கூட்டுறவாளர் தீர்மானம்

சாய்ந்தமருது, செவ்வாய்

கூட்டுறவுச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட இருக்கும் பெரிய ஆரம்ப சங்கங்களின் நிர்வாகசபையில் அறுபது வீதத்தினர் அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்படவேண்டுமென்றும், தற்போது செயற்பட்டுவரும் மாவட்ட சமாசங்கள் தொடர்ந்தும் இயங்குவதுடன், அவை ஒவ்வொன்றும் தமது பிரதிநிதிகளை இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் பொதுச் சபைக்கு அனுப்பக்கூடியதாக இருக்கவேண்டுமென்றும் கூட்டுறவு இயக்கப் புனரமைப்புத் திட்டம் பற்றி ஆராயுமுகமாக மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டுறவாளர் மகாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மகாநாடு நிறைவேற்றிய தீர்மானங்கள் வருமாறு:

இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம், மாவட்டசமாசங்களையும், அகில இலங்கைக் கூட்டுறவுச் சமாசங்களையும் மாத்திரம் அங்கத்தவர்கள் கொண்டதாக அமையவேண்டும்.

கூட்டுறவுச் சம்மேளனத்தின் சந்தாமுறை இப்போதிருப்பது போன்று ஒரு மாவட்டத்திலுள்ள சங்கங்கள் ஆண்டுதோறும் தமது இலாபத்தில் 5 வீதத்தை மாவட்ட சமாசத்திற்குச் செலுத்த, மாவட்ட சமாசம் இவ்விதம் சேர்ந்த மொத்தத்தில் 25 வீதத்தை சம்மேளனதிற்குச் செலுத்துதல் தொடர்ந்து இருக்க வேண்டும்.

ஒருங்கிணைக்கப்படும் சில சங்கங்களுக்குத் தம்முடைய வசதிக்கேற்பத் தமக்கு அண்மையிலுள்ள தாய்ச்சங்கத்துடன் இணைந்திருக்கவேண்டும்.

......

## நிந்தவூர் கி. ச. தீர்மானம்

சாய்ந்தமருது, செவ்.

"கல்முனைத் தென்பகுதி பஸ் பிரயாணிகளின் நலன் கருதி அவர்கள் பிரயாணக் கஷ்டத்தை நீக்க கிராம சபை உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்ற தீர்மானம் நிந்தவூர் கிராம சபையின் மாதாந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டம் சபையின் உபதலைவர் ஜனாப் ஏ. அமீர் அலி தலைமையில் நடைபெற்றது.

பலகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள களுவாஞ்சிக்குடி, அல்லிமுல்லை பஸ் சேவையை மீண்டும் நடாத்துமாறு மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போ அதிகாரிகளைக் கேட்பதென்றும், கல்முனை - காரைதீவு வரை அம்பாறை இ போ ச. டிப்போவால் நடத்தப்படும் பஸ்சேவையை நிந்தாவூர்வரை விஸ்தரிக்குமாறு கோருவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

.....

## சிட்னியில் பாப்பரசர்

சிட்னி, டிசம்பர் 1

அவுஸ்திரேலியாவுக்கு மூன்றரை நாள் விஜயம் மேற்கொண்டுள்ள பாப்பரசர் ஆருவது சின்னப்பர் சிட்னிவந்து சேர்ந்தார். இவர் வருவதற்கு முன்பாகவே பொலிசார் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

பாப்பரசர் ... நிலையத்தில் வந்திறங்கிய

## அரசாங்க எழுதுநர்சேவை பரீட்சை

கோட்டை, செவ்

அரசாங்க எழுதுநர் சேவையின் பொருட்டு மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்படவிருக்கும் 600 பேரில்வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து 66பேர்மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர்.

இதுபற்றி அறிவித்தல்சென்ற மாதம் 20ந்திகதி வெளிவர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்

ஏழை - பணக்காரர் என்ற

# வர்க்க பேதமற்ற கல்வி முறை அமுலுக்கு வரும்

## துணைக் கல்வி அமைச்சர் வாக்குறுதி

கோட்டை, செவ்வாய்

ஏழைப்பிள்ளைகளுக்கு ஒரு மாதிரியும், பணக்காரருக்கு ஒருமாதிரியுமான கல்வியளிக்கப்பட்டு வருவது நீக்கப்பட்டு சகல பிள்ளைகளுக்கும் ஒரேவிதமான கல்விகிடைக்கும் வகையில் புதிய கல்வித்திட்டம் ஒன்று அமுலுக்குக் கொண்டுவரப்படும்

இவ்வாறு கல்வி துணை அமைச்சர் பி. வை. துடாவை கூறினார். காலியில் வித்தியாலோக வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பின் போது கூறினார்.

### தபால்மூலம் பயிற்சி

இப்பொழுது உள்ள ஆசிரியர்களுக்கு தபால் மூலம் கல்வி போதனையளித்து திறமையற்ற ஆசிரியர்களின் தகுதியைப் பேணுவதற்கு கல்வி அமைச்சு புதிய திட்டம் ஒன்றை அமுல்நடத்த முடிவு செய்திருக்கின்றது. அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் சகல பிள்ளைகளுக்கும் முழுமையான கல்வி கிடைக்க வழிசெய்யப்படும். தினசரி மாற்றமடைந்துவரும் சமூகத்துக்கு ஏற்ற வகையில் நாட்டை ஈடேற்றிச் செல்லும் திறமை வாய்ந்த சிறந்ததோர் பாம்பரையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று திரு துடாவை கூறினார்.

இன்று எமது அரசாங்கத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளை குலைத்துவிடுவதற்கு சில கோஷ்டிகள் முயற்சிகள் எடுத்து வருகின்றன. சில பாடசாலை மாணவர்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும் இவர்கள் பயன்படுத்த முனைகிறார்கள். ஆனால் பொதுச்சொத்துக்களுக்கு ஊறுவிளைவிக்கும்மாணவர்களுக்குஎதிராகநாட்டின் சட்டதிட்டங்களுக்கமைய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கத் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார் துணை அமைச்சர். நாட்டின்தேவைக்கு ஏற்றவகையில் எதிர்காலச் சந்ததியை வழிநடத்துவதற்கு ஆசிரியர்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்

# ஏழைகளின் நிலப்பிரச்னை தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கும்

— பீட்டர் கெனமன்

இரத்தினபுரி, செவ்.

பொதுத்தேர்தலின் பொழுது மக்கள் அரசாங்கம் கொடுத்த மிக முக்கிய வாக்குறுதிகளில் இருபத்தைந்தை 5 ஆண்டுகளில் நிறைவேற்றித்தருவோம் என்று வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் புளுத்தோட்டை என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினார்

நிலம் இல்லாத ஏழை மக்களின் நிலப்பிரச்னையைத் தீர்த்துவைக்கும் விதத்தில் இதுவரை காலமும் ஏழை மக்களைச் சுரண்டிகொண்டிருந்த நிந்தகம் முறை ஒழித்துக்கட்டப்படும் அடுத்தாண்டு முடிவடைவதற்கு முன்னர் இரண்டு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று திரு. பீட்டர் கெனமன் தெரிவித்தார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொலன்ன பிரதேச வாலிபர் இயக்கத்தின் வருடாந்த விழாவில் திரு. கெனமன் பேசினார்.

முந்திய அரசின் ஆட்சிக்காரர்கள். ஆனால் பணக்காரரின் பணப்பெட்டி வீங்கிக் கொண்டே இருந்தது.

கடந்த தேர்தலின் போது அமெரிக்காவிடமிருந்து அந்த அரசாங்கம் 17 கோடி ரூபாவை கடனாக வாங்கியிருந்தது நூற்றுக்குப் பத்து வீதம் வட்டியுடன் அக் கடனை இந்த அரசினால் அடைக்கவேண்டியிருக்கிறது என்றார் திரு. கெனமன்.

நேற்று முன்தினம்

# செனட் ஒழிப்பு மசோதா விவாதத்துக்கு வரவில்லை

## ஹஜ் யாத்திரை பற்றி இச்சிலான் பிரஸ்தாபம்

கொழும்பு, செவ்வாய்

செனட் ஒழிப்பு மசோதா உட்பட வேறு பல முக்கிய மசோதாக்கள் ஆராயப்படுவதற்காக சபையின் மாமூல் அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி நீதிமந்திரி கொண்டு வந்த பிரேரணையை நேற்று செனட்சபை நிராகரித்தது.

ஹஜ் யாத்திரீகர்களுக்கு செலாவணி மறுக்கப்படும் பிரச்னையை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று செனட்டர் இச்சிலான் கேட்டுக்கொண்டார், ... தொகையல்லவென்றும் அவர் சொன்னார்.

இந்தக்கட்டத்தில் செனட்டர் ரெஜி பெரேரா பேச எழுந்தபோது 'உமது மதம் என்ன' என்று எதிர்க்கட்சியினர் கேட்டனர். மதம் என்று பொதுவாக அறியப்படும் அர்த்தத்தின்படி தாம் ஒரு சமயவாதி அல்லவென்றும், புத்தர், கிறீஸ்து, முகம்மது, கார்ல்மாக்ஸ்போன்ற பெருமக்களின் போதனைகளின்படி தாம் நல்ல வாழ்க்கை வாழ முனைபவர் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த 100 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் சிறு சிறு சண்டைகள் ஆங்காங்கே நடந்து கொண்டிருப்பதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன

ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து கினிக்குச் சென்று கூலிப்படைகளின் ஊடுருவலைப்பற்றி ஆராய்ந்தகுழு ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டுடன் பேச்சுவார்த்தை நடத்தியது, இக்குழுவினர் தங்கள் அறிக்கையை மிகவிரைவில் சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குடிக்க நீரின்றிக் கஷ்டமாம்

சாய்ந்தமருது, செவ்.

நாடெங்கும் மக்கள் வெள்ளத்தினல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளை, சிலர் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் விந்தையான செய்தியும் கிடைத்துள்ளது. காத்தான் குடியிலுள்ள ஒரு பாடசாலை மாணவர்கள் தான் இவ்வாறுகுடிப்பதற்கு நீரின்றிக் கஷ்டமுறுபவராவர்.

மட்டக்களப்பு கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த காத்தான்குடி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும். மாணவர்கள் தங்கும் விடுதியிலும் தற்போது குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனல் விடுதியில் தங்கும் மாணவர்கள்பெரும் கஷ்டப்படுகின்றனர். அரசாங்கத் தண்ணீர் விநியோக இணைப்பு இருந்தும் இம்மாணவர்களுக்கு உரிய நேரங்களில் தண்ணீர் விநியோகம் நடைபெருததையடுத்து அக்கம் பக்கங்களிலுள்ள வீடுகளின் கிணறுகளை நாடவேண்டிய இக்கட்டான நிலையில் இவர்கள் உள்ளனர்.

## உள்ளூராட்சி தேர்தல்

மாவிட்டபுரம், செவ்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் 7 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இம்மாதம் நடக்கவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள 7 உள்ளூராட்சிமன்றங்களின் தேர்தல்களை இம்மாதம் நடாத்த யாழ். தேர்தல் அதிகாரி திரு. எஸ். நடராசா ஏற்பாடுகளைச் செய்து வருகிறர்.

பிரதமர் ... கொவான் கலந்துகொள்ள மாட்டார்.

## நஷ்டஈடு கிடைக்குமாம்

நல்லூர், செவ்வாய்

இம்மாதம் 5-ந் திகதி 'லக்ஸபான' மின்சாரம் சுன்னகம் மின்சார நிலையத்துடன் இணைக்கப்படும் முதலில் பரீட்சார்த்தமாகப் பரீட்சிக்கப்பட்டு இம்மாதம் 10-ந் திகதி முதல் யாழ். குடாநாடு முழுவதற்கும் மின்சாரம் விநியோகிக்கப்படும். மின்சாரம் இணைக்கப்பட்டதும் பொது மக்களுக்கு வேண்டியளவு மின்சாரம் பாவனைக்குக் கிடைக்குமென்று உயர் அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

இந்த மின்சார இணைப்பை ஏற்படுத்துவதற்கு கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இருந்து வந்த தடையை யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளை எடுத்துக் கொண்ட முயற்சிகள் நீக்கியுள்ளன

மின்சார வயர்களை தமது காணிகளுக்கூடாக கொண்டு செல்வதனை பொதுமக்கள் ஆட்சேபித்திருந்ததன் காரணமாக மின்சாரம் இங்கு வருவதற்குத் தடையாக இருந்தது சம்பந்தப்பட்ட பொதுமக்களை திரு முருகேசம்பிள்ளை சந்தித்து அவர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தருவதாக உறுதி அளித்ததன் பேரிலேயே மின்சாரம் இங்கு விரைவாக வரக்கூடியதாக இருந்ததாகக் கூறப்படுகிறது

## தற்காலிக வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், புதன்

அனலைதீவு ஆஸ்பத்திரியில் அட்டன்டராகக் கடமையாற்றிய தம்பையா என்பவர் அதே ஆஸ்பத்திரியில் அட்டன்டராகக் கடமையாற்றிய சிறில், என்பவரையும் ஆஸ்பத்திரி சிறு தொழிலாளியையும் சாதி பெயரைச் சொல்லி தாக்கியதாகக்கிடைத்த புகாரைத் தொடர்ந்து யாழ். சுகாதார அதிபரினல் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நியமன எம். பி.யும், சிறுபான்மைத் தமிழர் மகா சபைத் தலைவருமான திரு. எம், ஸி. சுப்பிரமணியம், இதுசம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ், சுகாதார சுப்பிரீண்டனிடம் கேட்டுக்கொண்டிருந்தார்.

## வருடாந்தக் கூட்டம்

மாவிட்டபுரம், செவ்.

தெல்லிப்பளை ஐக்கிய பண்டகசாலை வருடாந்தக் கூட்டம் யூனியன் கல்லூரியில் நடைபெற்ற போது புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர் திரு. ரி. கே. இராசசேகரம், உப-தலைவர் திரு. வி வேலாயுதம், காரியதரிசி திரு. ரி செல்லத்துரை, தனதிகாரி திரு. வி பொன்னுத்துரை. நிர்வாக சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் மு சின்னத்தம்பி, இ பொன்னையா, இ காசிப்பிள்ளை, கி முத்தையா ரி நவரட்டினம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்

## புதுக்குடியிருப்பு கி. ச. தேர்தல் முடிவு

புதுக்குடியிருப்பு, செவ்

புதுக்குடியிருப்பு கிராமச் சபை தேர்தல் சென்ற27-ம் திகதி அமைதியானமுறையில் நடைபெற்றது. பத்து வட்டாரங்களிலும் வெற்றிபெற்றோர் விபரம்:

1-ம் வட்டாரம் மா. செல்லையா, 2-ம்வட்டாரம் சி சிதம்பிப்பிள்ளை, 3-ம் வட்டாரம் எஸ். அருளம்பலம், 4-ம் வட்டாரம் பொ. பாலசிங்கம், 5-ம் வட்டாரம் யே.பி. சேவியர், 6-ம் வட்டாரம் க. சதாசிவம், 7-ம் வட்டாரம் சி.வேலுப்பிள்ளை 8-ம் வட்டாரம் ப. அருளானந்தம், 9-ம் வட்டாரம் செ. சூசைப்பிள்ளை, 10-ம் வட்டாரம் ச. தம்பிராசா.

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், செவ்வாய்

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் 57-ம் ஆண்டுப் பொதுக்கூட்டம் திரு. ந. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற போது பின் வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: டாக்டர் வி. ரி. பசுபதி, தலைவர்: திரு. ந. சிவசிதம்பரம், பொதுக் காரியதரிசி: திரு கு. ஜெயக்குமார், கொழும்புக் காரியதரிசி: டாக்டர் ந. நடராசா. மற்றும் க. சிவராசா, சி: சுப்பிரமணியம், ம. முத்துலிங்கம், இரா. சோமஸ்கந்தர் ஆகியோரும் நிர்வாகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

...திருந்தனர்.

பாப்பரசர் சிட்னிவிமான நிலையத்தில் வந்திறங்கியதும் லட்சக்கணக்கான மக்கள் ஆரவாரம் செய்து தங் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். சிட்னிவிமான நிலையத்தில் 4,000 மக்கள் திரண்டிருந்தனர். ஆனல் பாப்பரசர் தலைநகருக்குச் சென்ற ஆறுமைல் பாதை நெடுகிலும் பத்தாயிரக்கணக்கான அவுஸ்திரேலிய மக்கள் திரண்டு நின்று தரிசித்தனர்.

மணிலாவில்பாப்பரசருக்கு ஓர் இளைஞன் கத்தியால் குத்த முயன்ற சம்பவத்தை அடுத்தே அவுஸ்திரேலிய பொலிசார் கட்டுப்பாடான பாதுகாப்பு நடவடிக்கையை எடுத்தனர்: 700 பொலிசாருக்கு மேற்பட்டவர்கள் விமான நிலையத்தில் பாதுகாத்து நின்றனர். விசேட அனுமதி பெற்றவர்களைத் தவிர வேறு யாரும் விமான நிலையத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை பாப்பரசர் விமானத்தில் இருந்து இறங்கியதும் பொலிசார் சுறுசுறுப்படைந்தனர்.

அவுஸ்திரேலிய கவர்னர் ஜெனரலை பாப்பரசர் சந்திக்கச் சென்றபொழுது அவரது முகத்தில் எவ்வித களைப்பும் காணப்படவில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கு முன் ஞாயிறு தொழுகை இரண்டை சாமோவில் நடத்தினர்கள்

## நாவலர்விழா கொண்டாடினர்

சுழிபுரம், செவ்வாய்

பண்ணகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நாவலர் விழா கொண்டாடப்பட்டது. நாவலர் பெருமை பற்றி பண்டிதர் அ. ஆறுமுகம், புலவர் கா. வேல்முருகன் ஆகியோர் உரையாற்றினர். வித்தியாலய அதிபர் திரு செ. ஸ்ரீநிவாசன் விழாவுக்குத்தலைமை வகித்தார்.

0 0 0

மாவிட்டபுரம், செவ்வாய்

தெல்லிப்பழை பாலர் ஞானேதய சபையினரால் காசி விநாயகர் ஆலயமண்டபத்தில் சபைத் தலைவர் சிவஸ்ரீ. சிவகடாட்சக் குருக்கள்தலைமையில் நாவலர் விழாகொண்டாடப்பட்டது

இவ் விழாவில் விசேட பூசை கூட்டுப்பிரார்த்தனை என்பன நடை பெற்றபின் நாவலரின் தொண்டுகள் பற்றிப் பலர் உரையாற்றினர். இ. கணேசலிங்க ஐயர் நன்றி தெரிவித்துப் பேசினர்.

...மாதம் 20ந்திகதி வெளியானவர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

1971ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ம் திகதிவரை பொது எழுதுநர் வகுப்பில் 1200 பேர் சேர்க்கப்படவிருக்கின்றனர். இவர்களில் 600பேர் அரசாங்கசேவையிலுள்ள சிறு ஊழியர்மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுவர். ஏனைய 600 வெற்றிடங்களும் மாவட்ட ரீதியாக நிரப்பப்படும்.

மத்திய எழுதுநர் பரீட்சை நிறுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ரீதியாகத் தரவாரித் திட்டமொன்றின்படி தெரிவு செய்யப்படவிருக்கும் 1வது பரீட்சை இதுவாகும். 22 மாவட்டங்களுக்குமான 600 ஸ்தானங்களில் தெரிவு யாழ்ப்பாணம்-42, வவனியா- தலா3 மட்டக்களப்பு-12, திருகோணமலை-6 எனவகுக்கப்பட்டுள்ளது விண்ணப்பமுடிவு திகதி இம்மாதம் 21ம் திகதியாகும்.

## வெள்ளத்தில் முல்லைத்தீவு

முல்லைத்தீவு; செவ்.

தொடர்ந்து பெய்தமழை காரணமாக முல்லைத்தீவுப் பகுதி எங்கும் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றது.

முல்லைத்தீவு சின்னத்தன் காட்டுப்பாலவீதி மீண்டும் வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டுப் போக்கு வரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

பலருடைய வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது, முல்லைத்தீவு மணற்குடியிருப்பு சின்னத்தன்காடு. கள்ளப்பாடு கரைச்சிக்குடியிருப்பு ஆகியபகுதிகள் வெள்ளத்தினல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தந்திதொலைபேசித்தொடர்புகள் பஸ் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு கொன்வன்ட் பாடசாலை வெள்ளத்தால் மூழ்கியுள்ளது. நேற்று முன்தினம் பாடசாலைகள் நடைபெறவில்லை.

முல்லைத்தீவுப் பட்டின சபைத்தலைவர் திரு ம. சு. வஸ்தியாம்பிள்ளை சபையின் ஏனைய உறுப்பினர்கள், காரியாதிகாரி திரு. சொ. கணேசநாதன், கிராமசேவையாளர் ஆகியோர் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு நிவாரணம் கொடுக்கச்சகல ஏற்பாடுகளையும்செய்துவருகின்றனர்.

தேச வாலிபர் இயக்கத்தின் வருடாந்த விழாவில் திரு. கெனமன் பேசினர்.

முந்திய அரசின் ஆட்சிக் காலத்தில் ஏழைமக்கள் தொடர்ந்தும் ஏழைகளாகவே மாறிக்கொண்டிருந்...

## கார்த்திகைப் பிறை

மாவிட்டபுரம், செவ்.

பெருந்திரளான மக்கள் கார்த்திகைப் பிறையை நேற்று மாலை தரிசித்தனர்.

சில தினங்களாக கடும் மழையும் இருளும் இருந்தமையால் இவ்வருடம் கார்த்திகைப் பிறையைக்காண முடியாது என மக்கள் கவலைகொண்டிருந்த போதிலும் திங்கட்கிழமை மழை இருள் வெளித்து மாலை பிறை பிரகாசமாக தெரிந்தது. மக்கள் பக்தி சிரத்தையுடன் இப்பிறையை பெரும் கூட்டம் கூட்டமாக நின்று வழிபட்டனர்.

இ.போ.ச

## 5 அதிகாரிகள் வேலை நீக்கம்

கோட்டை, செவ்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை தனது உயர் அதிகாரிகளில் 54 பேரை வேலை நீக்கம் செய்துள்ளது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் மேற்படி உத்தியோகஸ்தர்கள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டனர், போக்குவரத்தமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தன இ. போ. ச வுக்கு மேற்படி உத்தியோகத்தர்களை வேலை நீக்கம் செய்யுமாறு உத்தரவிட்டதைத் தொடர்ந்தே அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்.

## போக்குவரத்து தடை

கோட்டை, செவ்

அப்புத்தளை- கொழும்பு பிரதானவீதியில் விகாரகொல என்னுமிடத்தில் ஏற்பட்ட பெரிய மண்சரிவு காரணமாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பதுளை, பண்டாரவளை. இரத்தினபுரி ஆகிய இடங்களிலிருந்து கொழும்பு செல்லும் நேரடி பஸ்சேவைகளும் இன்னும் சீராகவில்லை.

கிரியெல்லபகுதிநீர் கொழும்பு- குருநாகல் வீதி வெள்ளத்தால் போக்கு வரத்துத் தடைப் பட்டுள்ளதாகவும், வெள்ளவாய ஈ- அம்பாறையிலுள்ள மதகு சேதமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

படும் பிரச்னையை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று செனட்டர் கிச்சிலான் கேட்டுக்கொண்டார்,

சுகதேகியான ஒவ்வொரு முஸ்லிமும் தனது வாழ்நாளில் ஒரு தடவையாகுதல் ஹஜ்யாத்திரைசெய்யவேண்டியது சமயக் கடமைகளில் ஒன்று என்று கிச்சிலான் விளக்கினர். அரசாங்கத்தின் நடவடிக்கை முஸ்லிம் மக்களின் மதவிஷயங்களில் தலையிடுவதாகும் என்று செனட்டர் கிச்சிலான் குற்றஞ்சாட்டினர். வருடத்தில் சுமார் நானூறு பேர்தான் ஹஜ்யாத்திரை செய்கிறர்கள் என்றும் எனவே இதன் செலாவணி தலைக்கு 2 ஆயிரத்துக்கு மேல் போகாதென்றும் இது ஒரு பெரிய ...மது, கார்ல்மார்க்ஸ் போன்ற பெருமக்களின் போதனைகளின்படி தாம் நல்ல வாழ்க்கை வாழ முனைபவர் என்றும் செனட்டர் ரெஜி பெரேரா கூறினர்: நாடு செலாவணி நெருக்கடியிலிருக்கிறதென்றும் இரண்டொரு ஆண்டுகளுக்குப் பொறுத்துக்கொள்ள முஸ்லிம்களால் முடியாததில்லை என்று கூறிய அவர் புனித யாத்திரைகளில் வர்க்க பேதம் தலைதூக்குகிறதென்றும் பணக்காரர்கள் மாத்திரமே யாத்திரை செல்கிறர்களென்றும் ஏழை முஸ்லிம்களையும் யாத்திரையில் அனுப்பினல்என்ன வென்றும் அவர் கேட்டார்.

(சி பி ஏ)

## பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து பெண் மரணம்

பருத்தித்துறை, செவ்.

ஓடிக் கொண்டிருந்த பஸ் வண்டியிலிருந்து தவறி விழுந்த பெண் ஒருவர் ஆஸ்பத்திரியில்மரணமானர் இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு அண்மையில் நிகழ்ந்துள்ளது. கரவெட்டியைச் சேர்ந்த அம்மாளாத்தை என்ற பெண் தனது பெட்டி பஸ்வண்டியிலிருந்து விழுந்து விட்டதைக்கண்டு அதை எடுக்க முயற்சித்த போதே இவ் விபத்து நேரிட்டதாகத் தெரியவந்தது. பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இப்பெண் பின்னர் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு மரணமானர். சம்பந்தப்பட்ட பஸ் வண்டி பருத்தித்துறை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது,

## வேதன உயர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

கோட்டை, செவ்.

ஜனவரிமாதம் 25-ந் திகதி நடைபெறவிருக்கும் தபால் அதிபர்களின் பொறுப்புப் பரீட்சைக்கு நீடிக்கப்பட்ட கால எல்லையுள் சிங்களச் சோதனை எட்டாம் வகுப்புச் சித்தியடைந் திருந்தும் தத்தமது வேதன உயர்வுகளை பெருதோர் இச்சோதனைகளுக்குவிண்ணப்பிக்கலாம் என அஞ்சல் அலுவலக சுற்றறிக்கை ஒன்று தெரிவிக்கிறது

அஞ்சல் தொலை தொடர்புச்சேவையாளர் சங்கத்தினர்பொது நிர்வாக அமைச்சர்திரு, பீலிக்ஸ்ஆர்.டயஸ். பண்டாரநயகா விடம் வேண்டுகோள் விடுத்தனர். அவர்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து மேற்படி அறித்தலை மேற்படி சங்கம் விடுத்துள்ளது.

## தேஸ்டன் கல்லூரி திறக்கப்பட்டது

கொழும்பு, செய்வாய்

ஆறு தினங்களாக மூடப்பட்டிருந்த தேஸ்டன் கல்லூரி நேற்றுத் திறக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தேஸ்டன் கல்லூரி மாணவர்களுக்குமிடையே நடைபெற்ற கைகலப்பைத் தொடர்ந்து இருகல்விக்கூடங்களும் மூடப்பட்டிருந்தன. கொழும்பு பல்கலைக்கழகம் இன்னமும் திறக்கப்படவில்லை.

ஜனவரி முதல்

## சலுசலா பொறுப்பேற்கும்

கோட்டை, செவ்

உள்ளூரில் உற்பத்தியாகும் ஜவுளிகள் முழுவதையும் அடுத்தாண்டு ஜனவரியிலிருந்து பொறுப்பேற்று விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை லங்கா சலுசலா மேற்கொண்டுள்ளது.

கிராம அபிவிருத்தி இலாகாவின்கீழ் இயங்கும் நெசவு நிலையங்கள் யாவற்றிலும் நெசவு செய்யப்படும் துணிகள் யாவும் இனிமேல் சலுசலா மூலமே பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பாவம்புரிவது மனிதஇயல்பு. ஆனுல் மனிதன் பாவம் புரிவது நிச்சயம் என்பது ஒருபுறமிருக்க அவனை மீட்பதற்கான வழிகளை இறைவன் ஆக்கி வைக்கிருர் என்பது இருமடங்கு நிச்சயமாக உள்ளது. — பரமஹம்ஸர்.

ஈழநாடு
Eelanadu National Family Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna. Telephone: 889.
சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 17ம் தேதி (2-12-70)

## இலங்கை - இந்தியா ஒத்துழைப்பு

புதுடில்லியிலே இலங்கையின் புதிய ஹைகமிஷனர் என் கியூ. டயஸ் தமது நியமனக் கடிதத்தை அளிக்கையில், இந்திய ஜனாதிபதி திரு. கிரி அதை ஏற்று, இரு நாடுகளுக்கும் தொன்றுதொட்டு இருந்து வரும் பரஸ்பர உறவுகளைக் கூறி, இரண்டுக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்னைகள் பொதுவானவை என்றும் இவற்றைத் தீர்ப்பதில் இருநாடுகளும் எதிர்காலத்தில் தீவிரமாக ஒத்துழைக்கலாமென்று நம்புவதாகவும் தெரிவித்தார். இந்த நம்பிக்கை நிறைவேறினுல், அதனுல் இந்தியாவைவிட நம் இலங்கைக்குப் பலவிதங்களிலும் நன்மை கிடைக்கவும் நமது பிரச்னைகள் பெருமளவு தீரவும் அதிக இடமுண்டு.


ராஷ்டிரபதிபவனில் கடிதத்தைகையளித்த பின் ஹைகமிஷனர் டயஸ் தமது மாளிகைக்குத் திரும்பி ஒரு பத்திரிகைக்காரரிடம் பேசுகையில், அதே நம்பிக்கையைத் தெரிவித்திருககிருர். "'நாம் ஒரே மக்கள் இலங்கையிலுள்ள 3 பெரிய சமூகங்களில் சிங்களவர்களும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். அதேமாதிரிதான் தமிழரும். முஸ்லீம்களுக்கும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புண்டு. எல்லாவற்றையும்விட, இலங்கையின் பெரிய ஆத்மீகச் செல்வமான பௌத்தமும் இந்தியாவிலிருந்து வந்ததே' என்று கூறிவிட்டு உலகில் எந்த இரு நாடுகளும் எவ்வித நிபந்தனையுமின்றி ஒத்துழைக்கக் கூடுமானுல், இந்தியாவும் இலங்கையும், அதற்கு ஒரு முன்மாதிரியாக இருக்க முடியும்'' என்ருர். அரசியல், பொருளாதார பிரச்னைகள் ஒருபுறமிருப்பினும், கல்வி, கைத்தொழில் முதலிய விஷயங்களில் தலையிட்டு இலங்கையிலுள்ள தமிழ் சமஷ்டிக்காரரை ஆதரிப்பரோ என்ற பீதி இலங்கையில் இருப்பதாயும், இலங்கையின் ஒற்றுமைக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் அது தடையாக இருப்பதாகவும் ஹைகமிஷனர் டயஸ் தெரிவித்திருக்கிருர். வெளிநாட்டினர் யாராயினும் நமது உள்நாட்டு அரசியலில் தலையிடுவதாயின் அதைத்தடுக்கவேண்டியதே. ஆனுல் தமிழகத்திலுள்ள தி. மு. க. தாங்கள் இலங்கை அரசியலில் எவ்விதமும் தலையிடவில்லையென்று பன்முறையும் உறுதி கூறியுள்ளனர். சந்தேகங்களுக்கும் பீதிகளுக்கும் பெரிதும் காரணம் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்துப் பேசாததே. இந்தப் பெரும் குறையை நீக்க இலங்கையின் கூட்டுமுன்னணி அரசாங்கம், தமிழக முதல் அமைச்சரும், தி. மு. க. தலைவருமான திரு. கருணநிதியை இலங்கைக்கு அழைத்துள்ளனர். இந்தச் துணிச்சலான நடவடிக்கைக்காக இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும். தமிழக முதல்வர் இங்கு நேரில் வருகையில், மேற்குறித்த சந்தேகங்களும் பீதிகளும் நீங்க வழிபிறக்குமென்றே நம்புவோம்.

இலங்கை மக்களில் ஒரு சார்பினரைப் பற்றியே, அரசாங்கத்துக்கு அவநம்பிக்கை இருப்பதாயின் அது பெரிதும் துரதிருஷ்டம், அதை முதலில் நீக்க ஆவன செய்யவேண்டும். ஈழத்தில் உள்ள ஒவ்வொரு தமிழரும் தேசாபிமானத்தில் யாருக்கும் பின்தங்கியவரல்லர். தாங்களும் சமஉரிமையுடன் மானத்துடன் இங்கு தொடர்ந்து வாழமுடியுமா என்பதே அவர்களது பீதி.

# மற்றவரின் கருத்தை அடக்க முற்பட்டால் ஆட்சி பின் தங்கிவிடும்

— மகாத்மாகாந்தி —

நாம் நமது எண்ணங்களை, திருப்பங்களை மற்றவர்கள்மீது சுமத்தினுல், உத்தியோக ஆட்சியைத் தோற்றுவித்த விரல்விட்டு எண்ணக்கூடிய ஆங்கிலேயர்களின் கொடுமையைக் காட்டிலும் அது ஆயிரம் மடங்கு கொடியதாகும். ஆங்கிலேயர்களின் பயமுறுத்தல் எதிர்ப்புகளுக்கிடையே தங்களது நிலைமையை பலப்படுத்துவதற்காக சிறிய எண்ணிக்கையிலுள்ளவர்கள் செய்த போராட்டமாகும். ஆனுல் நமது பயமுறுத்தலோ பெரும்பான்மையோரால் பிறர் மீது சுமத்தப்படுவதாகும். எனவே ஆங்கிலேயரின் கொடுமையைக் காட்டிலும் அது கொடியதாக இருப்பதுடன் ராட்சதத்தன்மையுடையதுமாகும்.



### வன்முறைகளை களையவேண்டும்

நமது போராட்டத்திலுள்ள வன்முறைகள் அனைத்தையும் களைந்துவிட வேண்டும். ஒத்துழையாமை கொள்கையில் சுதந்திரமாக நிலைத்து நிற்கக் கூடிய நாம் சிறிய எண்ணிக்கையுள்ளவர்களாக இருப்போமானுல் மற்றவர்களை நமது கருத்துக்கு ஒத்தவர்களாக செய்யும்முயற்சியில்இறங்கவேண்டிய அவசியமும் ஏற்படலாம் அப்பொழுது நாம் நமது கருத்தைக் காக்க உண்மையுடன் உயிர்நீத்தோம் என்று கூறப்படும் மக்களை அவர்களது விருப்பத்திற்கு மாருக நாம் நமது கட்சியில் சேர்த்துக்கொண்டால், நமது கொள்கையிலிருந்து தவறியவர்களாவோம். இதில் சிறிது வெற்றியடைந்ததாகத் தோன்றினுலும் நாம் தவருன பயத்தை நிலைநாட்டுவதில் வெற்றியடைந்தோம் என்றுதான் கூறப்படும்.

### கருத்து சுதந்திரம்

நாம் பொறுமையின்றிமற்றவர்களின் கருத்தை அடக்க முற்பட்டால் நமது ஆட்சி பின்தங்கிவிடும். அந்த நிலைமையில் யார் நம்மை ஆதரிக்கிருர்கள். யார் நம்மை எதிர்க்கிருர்கள் என்பதே நமக்குத்தெரியாமல் போய்விடும். அதிகபட்சம் கருத்து சுதந்திரத்திற்கு ஆக்கமளித்தலேவெற்றியடைவதற்கான நிபந்தனையாகும்.

### சத்தியாக்கிரகத்தின் இரகசியம்

கொடுமைகளுக்கு உட்பட்டவர்கள்மட்டுமே சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும். இதுதான் சத்தியாக்கிரகத்தின் ரகசியம். சத்தியாக்கிரகம் செய்யும்போது பிறரின் அனுதாபத்தை பெறக்கூடியதாக இருக்க வேண்டும். கொடுமை செய்தவர்களின் மனத்தை மாற்றக் கூடியதாகவும், அவர்கள் உள்ளத்திலுள்ள நியாய புத்தியை விழிப்படையச் செய்யக் கூடியதாகவும், துன்புற்றவர்கள்ஒத்துழைப்பின்றி கொடுமையாளர்கள் தங்களது விருப்பப்படி கொடுமை செய்ய முடியாது என்பதைக் காட்டக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இது சத்தியாக்கிரகத்தின் அடிப்படையாகும்.

இரண்டு நிலைகளிலும் மக்கள் தங்களது லட்சியத்திற்காக கஷ்டப்படத் தயாராக இல்லையெனில் சத்தியாக்கிரகத்தில் வெளி உதவியால் அவர்களுக்கு உண்மை விடுதலை கிடைக்காது.

சத்தியாக்கிரக இயக்கத்தில் போராட்ட முறை. போராட்ட முறையைத் தேர்ந்தெடுத்தல் அதாவது முன்னேறுவதா அல்லது பின்வாங்குவதா; சாத்வீக சட்டமறுப்புச் செய்வதா அல்லது நிர்மாணப்பணி, தன்னலமற்ற சேவையின் மூலம் அகிம்சா பலத்தை திரட்டுவதா என்பவற்றை முடிவு செய்வது சூழ்நிலையின் விசேடத்தேவைகளுக்கு ஏற்றவாறு செய்யப்படும்.

# குருமாற்றம் கூறுவதென்ன

— ஐயாத்துரை சரவணபவன் —

**டிசம்பர் மாதம் 4-ம் திகதி (கார்த்திகை 18) 52 நாடி 26 விநாடிக்கு குரு விருச்சிக இராசிக்குள் பிரவேசிக்கிருர். குரு மாற்றத்திஞல் நிகழும் 12 இராசிகளின் பொதுப்பலன்கள் இங்கு தரப்படுகின்றன.**

4-12-1970-ல் துலா இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பிரவேசிக்கின்ருர். விருச்சிகம் வியாழனது பகைவீடாகும். ஆயினும் வரவேண்டியவர் வந்து தானே ஆகவேண்டும் வியாழன் அகிம்சையைப் பேசும் குரு. ஆகவே உலக மக்களைப் பார்த்து அகிம்சை மேற்கொள்ளுங்கள் என்ற வேண்டுகோளை விடலாமே தவிர மக்களது மனப் போக்கை மாற்றமாட்டார்.

ஆகவே நாட்டிற் கஷ்டங்கள் பொருளாதார கஷ்டங்கள் மூலதனக்குறைவு, பொன் அதிக விலையேற்றம் உணவுற்பத்திக்குறைவு இவற்றையே எதிர்பார்க்கலாம்.

15-1-71 தொடக்கம் 3-3-71 வரை குருவும் செவ்வாயும் விருச்சிக இராசியிற் சஞ்சரிப்பர். அக்காலத்தில் [illegible]

தல், காரியங்கள் தடைப்படல் மந்தமான பேக்கு வைசூரி நெருப்புக்காய்ச்சல் போலியோ, புற்றுரோகம், பாரி[illegible]வாத முடக்கம் போன்ற ரோகங்கள் அஜீரணரோகம் கடன் உபத்திரவங்கள் உண்டு.

**கர்க்கடகம்**

புத்திரப்பேறு கர்ப்போ பத்தி[illegible]பிள்ளைகளுக்கு விவாக [illegible]

சிறப்புமணவாழ்க்கை, காதலில் மலர்ந்தவாழ்வு. சீதனங்கள் குறைவின்றிக் கிடைத்தல், எவரையும் பேச்சுவாக்குச் சாதுரியத்திஞல் வெல்லல், ஆடல் பாடல், சினிமா சங்கீதங்களில் ஈடுபடல் நடன சங்கீத அரங்கேற்றங்கள் [illegible]ன நீதிபதியாகவும் [illegible]மகர்த்தாவாகவும் தவிலகித்தல், புத்திரப் [illegible]

கா[illegible] நோய்கள் சில ஆரம்பமாகலாம். ஆகவே இராகு மாறும்வரை மிகக் கவனமாக இருக்கவேண்டும். இக்காலம் வீட்டில் இருந்து தூரத்தே வசிப்பது ஓரளவுக்கு ஆறுதலாகஅமையும்.

**மீனம்**

இவர்களுக்கு நற்பலன் நடைபெறும். தேகசுகம், தொழில் விருத்தி, கல்வித் தேர்ச்சி, விவசாய கைத்தொழில் நாடுகளில் புலமைப் பரிசில்கள் கிடைத்தல், பட்டங்கள் பதவிகள் உயர்தல் உண்டு. சனியீஸ்வரன் ஏழரைக் கடைக்கூறு ஆகையால் விலகும்போது நன்மைகளைச் செய்வார். ஆனுல் காலில் பாதரட்சையின்றிச் செல்லக்கூடாது. விவாகப்பேறு, மணவாழ்க்கை, புத்திரச்சிறப்பு நன்கு அமையும்.

இவைகள் கோட்சர ரீதியாக எழுதப்பட்டவை.

## மூதாட்டி மரணம்

பருத்தித்துறை, செவ்.

# ஐயாறன் எழுதுவது

விஞ்ஞானத்துக்காக நோபல் பரிசு பெற்ற ஸி. வி. ராமன் அவர்கள் நகைச்சுவை அதிகமுள்ளவராம். அவர் 75 ஆயிரம் ரூபாவை பெங்களுரில் ஒரு தனிப்பட்ட வங்கிக்காரரிடம் போட்டுவைத்தார். அந்த வங்கிக்காரர் நம்ப முடியாத அளவு வட்டி அளிப்பவர் என்றும், பண விஷயங்களில் பெரிய மாயாவி என்றும் புகழ்பெற்றவர். முடிவில் அந்த வங்கி முறிந்து, சர் ராமனின் அப்பணமெல்லாம் போயிற்று. வங்குரோட்டான அந்த வங்கிக்காரரை சர் ஸி வி. சந்தித்த போது "என்னைப் போன்ற ஒரு நோபல் பரிசுக்காரரை ஏமாற்றியதற்காக் உங்களுக்கு ஒரு நோபல் பரிசு அளிக்கவேண்டும்'' என்று சொல்லிச் சிரித்தாராம்.

0 0 0

கேரளத்திலே திருநகக்ர் கோயிலில் சட்டை அணிந்து செல்லலாமென்று போட்டிருந்த புதிய உத்தரவை ஆலயபரிபாலன போர்டினர் சென்ற 26ந் திகதி ரத்துச் செய்ய வேண்டியதாயிற்று. பழைய வழக்கத்தை ஆதரிக்கும் ஒரு கோஷ்டியினர், போர்ட் காரியாலயத்தின் முன் கூடி, மேற்குறித்த உத்தரவை வாபஸ்வாங்கும்படி சபைத் தலைவர் பாஸியை வற்புறுத்திக் கிளர்ச்சி செய்தனர். தலைவர் பாஸி இதன்பயனக அந்த உத்தரவை ரத்துச் செய்தார். இதுபற்றிக் கோவிலில் சட்டை போடுபவருக்கும், போடாதாருக்கும் அடிதடி நடந்தது குறிப்பிடத்தக்கது. ஆனுல் மற்றக் கோவில்ளுக்கு அந்த உத்தரவு தொடர்ந்து செல்லுமாம்.

0 0 0

இந்திய ஜனுதிபதி கிரி அவர்கள் இப்போது கேரளத்தைச் சேர்ந்த கொட்டக்கல்லில் ஆரிய வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகிருரல்லவா? இதற்குத் 'தாரா' சிகிச்சை என்று பெயராம் இதன்படி நோயாளியை, ஒரு விசேஷ மரக்கட்டிலில் படுக்கவைப்பர். தலைமட்டும் தூக்கி இருக்கும் தலைக்கு மேலே மருந்து எண்ணெய் ஒரு பாத்திரத்தில் கட்டித் தொங்கும். நெற்றி மீது எண்ணெய் மெதுவாகத் தொடர்ந்து ஊற்றும். சாதாரித்த மருந்து எண்ணெய் நோயாளியின் உடலெல்லாம் தடவி, நிபுணர்கள் பிடித்துவிடுவர். முடக்கு வாதத்திற்கு மட்டுமன்றி, நீர் வியாதி, இரத்த அமுக்கம் முதலிய நோய்களும் இதனுல் தீருகின்றனவாம்.

இந்த வைத்திய முறைக்குப் பத்தியம் மிகக் கடுமை. மிளகாயும், புளியும் கூடவே கூடாது. புது அரிசியோ, பச்சை அரிசியோ பாவிக்கப்படாது. 'நவரா' என்ற பழைய அரிசியை அல்லது கோதுமையைச் சாதமாக்கிச் சாப்பிடலாம். மீன், உளுந்து, மதுபானம், தயிர், பறங்கிக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய், முருங்கக்காய், வெங்காயம், பெருங்காயம் இவை விலக்கு. பச்சைத்தண்ணீர் குடிக்கக் கூடாது. போகம் பகல் நித்திரை, வேகமாக நடத்தல், கோபப்படுதல், உரத்துப் பேசுதல், சிரித்தல் அல்லது ஆழ்ந்து படித்தல் இவை தடுக்கப்பட்டுள்ளன. நடக்கத்தான் வேண்டுமாயின் பூமியில் கால்படாமல் செருப்புப் போட்டு நடக்கலாம். அறைக்கு வெளியே செல்லுகையில், மெல்லிய துணியால் உடலை மூடிக் கொள்ளவேண்டும்.

இந்தச் சிகிச்சை இரண்டு வாரங்கள் நடக்கும் மற்ற இரண்டு வாரத்துக்கு அவர் ஒய்வு எடுத்துக்கொள்வார். காரில் சிறிது தூரம் செல்லலாம். ஆரிய வைத்தியசாலைத் தலைவர் டாக்டர் பி. எஸ். வாரியாரின் கதகளிக் கோஷ்டி நடனம் நடைபெறும்.

1968ம் வருடம் இங்கு சிகிச்சைபெற்ற கிரி அவர்கள், "என் தேக சுகம் மிகவும் தேவலாம். சிறப்பாக என் எடை 28 ருத்தல் குறைந்தபின் இப்போது மிகச் சுறுசுறுப்பாக இருக்கிறேன்" என்று அந்த ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கு அவர் அப்போது எழுதினுர்.

இனி இந்த மாதிரிச் சிகிச்சை இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் பெருகக்கூடும்!

0 0 0

இருந்து சொல்லுவன்
கேண்மின்காள் ஏழைகாள்
அருந்தவந்தரும் அஞ்
செழுத் தோதிஞல்,
பொருந்து நோய்பிணி
போகத் துறப்பதோர்,
மருந்துமாகுவர் மன்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்'' என்ருர். அரசியல், பொருளாதார பிரச்னைகள் ஒருபுறமிருப்பினும், கல்வி, கைத்தொழில் முதலியவற்றில் இருநாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைக்க அதிக இடமுண்டென்றும் சரியாகச் சொன்னர். கைத்தொழில்துறையிலே இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெறமுடியுமாயின் இங்கு நமது கைத்தொழில்கள் பல வளரவும் அதனுல் நமது பொருளாதாரப் பிரச்னைகள் தீரவும் வழி பிறக்கக்கூடும்,

சென்னையிலுள்ள திமுக இலங்கையின் உள்நாட்டு ... தாங்களும் சமஉரிமையுடன் மானத்துடன் இங்கு தொடர்ந்து வாழமுடியுமா என்பதே அவர்களது பீதி. அந்தப் பீதியை நீக்க, பலம்வாய்ந்த கூட்டுமுன்னணி அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்குமாயின், தமிழரசுக்கட்சி உள்ளிட்டு எல்லாத் தமிழரின் ஒத்துழைப்பு இந்த அரசாங்கத்துக்குக் கிடைக்க முடியும். நம் வீட்டுப் பிரச்னையைத் தீர்க்க, அடுத்த வீட்டுக்காரரின் உதவியை நாடுவது பயனற்றதுடன், நமது பெருமையை அது உயர்த்தவும் முடியாது.

---

ஆசிரியருக்குக் கடிதம்

யாழ். மின்சார நிலைய வீதி

# 3-ம் ஒழுங்கையின் சீர்கேடு: மாநகரசபை கவனிக்குமா?

கடந்த 5, 6 வருடங்களுக்கு முன்னர் லொறி போன்ற பெரியவாகனங்கள் போய்வரக் கூடியதாக இருந்த யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த 3-ம் ஒழுங்கை தற்போது ஒருமாட்டுவண்டி கூட போகக்கஷ்டமான நிலையில் குறுகிவந்துகொண்டேயிருக்கிறது.

வருடாவருடம் ஒழுங்கையில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர் வேலிகளை அடைக்கும் போது ஒழுங்கைக்குரிய நிலத்தைப் பிடிப்பதிஞல் இவ்விதம் ஒழுங்கை சிறுத்துக்கொண்டுபோவதாக பல தடவைகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தபோதிலும் நிலைமையில் எதுவித மாற்றமுமில்லை யாழ்ப்பாணப்பட்டினத்தின் 'இருதய'மாகவிளங்கும் பகுதியில் இருக்கும் இந்த ஒழுங்கை நாளுக்குநாள் குறுகிக்கொண்டே போவதிஞல் இங்குவாழும் மக்கள் சுகாதாரத்திஞல் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

அவசர நோய்காரணமாக ஒரு வாடகைக் காரைக்கூட இவ் ஒழுங்கைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் இப்பகுதி மக்கள் மிகவும் அல்லற்படுகின்றனர். வாகனங்கள் போய்வர முடியாதிருப்பதால் இயகு வாகனங்களைக் கொண்டுசெல்லவும் கார் சொந்தக்காரர் மறுக்கின்றனர்.

மழைகாலத்தில் இவ்வொழுங்கை ஒரு சாக்கடையாகவே காட்சியளிக்கிறது. நெருக்கமான குடிசனமுள்ள இந்த இடத்தில் 'கான்' கூட இல்லாமலிருப்பதால் மழை வெள்ளம் ஒழுங்கையிலேயே தேங்கி நிற்கிறது. அத்துடன் வீடுகளிலுள்ள கிணறுகளில் பாவிக்கப்படும் தண்ணீரும்ஒழுங்கையிலேயே வந்து சேருகிறதுஇதனல் வருடம் பூராவும் இந்த ஒழுங்கையில் குப்பையும், வெள்ளமுமாக யாழ்ப்பாண நகரத்தின் புனிதத்தன்மையையே கெடுத்துக்கொண்டிருக்கிறது.

எமது ஒழுங்கையின் சீர்கேடுபற்றி அவ்வப்போது யாழ். மாநகர மேயர் கமிஷனர் சுகாதார அதிகாரி ஆகியோருக்கு அவசரகடிதங்கள் மூலமும் மகஜர் மூலம், தந்திமூலம் தொடர்புகொண்டிருந்தபோதிலும் எமக்கு இதுவரை எதுவித விமோசனமும் கிடைக்கவில்லை இதுபற்றி இனியாவது நடவடிக்கை எடுப்பார்களா?

பொ. பாலச்சந்திரன்
39/19 மின்சார நிலையவீதி
3 ம்ஒழுங்கை-யாழ்ப்பாணம்

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

15-1-71 தொடக்கம் 3-3-71 வரை குருவும் செவ்வாயும் விருச்சிக இராசியிற் சஞ்சரிப்பர். அக்காலத்தில் உலக நர்டுகளுக்கிடையே பிரச்னைகள் கூடுதலாகத் தோன்றும் தனி மனித வாழ்விலும் முக்கியமான பிரச்னைகள் உண்டு. திடீர் மாற்றங்கள், மன அமைதிக் குறைவு, சமநீதி கிடையாமை, வருமானத்திலும் மிக்க வாழ்க்கைச் செலவுண்டு.

## இராசி பலன்

### மேடம்

இவ்விராசியிற் பிறந்தவர்கள் ஏழரைச் சனியிஞலும் அட்டம வியாழனிஞலும் தாக்குண்டு அல்லற்படுவர். 15-1-1971 தொடக்கம் 3-3-71 வரை அட்டமச் செவ்வாயும் உண்டு. பெப்ரவரி 18, 19, 20-ம் திகதிகள் மிக முக்கியமானவை. அக்கினி, ஆயுதகருவிபயம், சத்துருக்களின் இரகசியத் தீங்குகளில் அகப்படல், சத்திரசிகிச்சை குடும்பப்பிரிவு பரீட்சைகளில் தோல்வி, காதலில் வீழ்ச்சி, வீட்டை, ஸ்தானத்தைக்,கடையைப், பதவியை விட்டு மாறுதல், இராணுவ. நகர பாதுகாவலர்களின் விசாரணைக்குள்ளாதல், பொருட்செலவு வழக்கு, உயரத்திலிருந்து தவறி வீழ்தல், மறைந்து வாழ்தல், அல்லது அந்நிய இடங்களில் சென்று வாழ்தல் இவையுண்டு,

### இடபம்

இவர்களுக்கு ஏழரைச் சனியும், களஸ்திரஸ்தான வியாழனுமிருப்பதிஞல் விவாகப்பேறு, காதலில் வெற்றி, வழக்குவெற்றி,சுற்றத்தவர்களிஞல் உதவி மரியாதை என்பன பெறுதல், சமாதான நீதிபதிப் பட்டம் கிடைத்தல், கிராம நகர பட்டின,அதிபதிகள் அங்கத்தவராதல் பொருள்வரவுண்டு .அதைச் செலவழித்தின்ப வாழக்கை உண்டு,

### மிதுனம்

ரோகபீடை, சத்திர சிகிச்சைகளில் அகப்படுதல் 15-1-71தொடக்கம் 3-3-71 வரை மிகக் கவனம். பகைவரிஞல் துன்பம், மாமன் மாரிஞற் துன்பங்கள் அனுபவித்தல், தாயாதிகள்வெறுத்தல், சரீர வருத்தம், பண நட்டம், திருடர்பயம்,நீர்த்தத்து. சர்ப்ப பயம், சிறைவாசம் அனுபவித்தல் அல்லது தடுத்து வைக்கப்படல் வாகனங்கள் நட்டமடை... திரவங்கள் உண்டு.

### கர்க்கடகம்

புத்திரப்பேறு கர்ப்போ பத்தி... பிள்ளைகளுக்கு விவாக சுபகருமங்கள் நடைபெறுதல், பிள்ளைகளுக்கு உத்தியோகங்கள் கிடைத்தல், மந்திர உபதேசம் பெறுதல், நீதிபதிகளாகவும் சமாதான நீதிபதிகளாகவும் நியமனம் பெறுதல், பத்திரிகைத் தொழிலில் ஈடுபடல், புத்தகம் பதிப்பித்தல். உத்தியோகங்கள் கிடைத்தல் தீவிரமான பதவி முன்னேற்றம் ஆசிரிய பதவிகளில் அதிபர்களாகவும் வெளிநாட்டுஇலவசப் படிப்புக்களில் வெற்றியீட்டல், போட்டிப் பேச்சுக்களில் விருதுகள் பெறுதல் மனைமங்கலச் சிறப்பு, வட்டிக்கடைகள் வைத்தல், பொன் வியாபாரத்தில் ஈடுபடுதல் இவை உண்டு.

### சிம்மம்

காணி பூமிப் பிரச்னைகள் விவகாரங்களில் ஈடுபடுதல் இடமாற்றம் பெறுதல் வாகனங்களை வாங்கல் வி...றல் மிருகங்களிஞல் நன்...மயடைதல், வியாபாரத்தில் ஏற்றஇறக்கம், அன்னைக்குத் தேகசுகம் ஆயுர்வேத, ஔடத வைத்திய ஆராய்ச்சி, இனசனங்களுக்கு உதவிசெய்தல், தேகாரோக்கியத்தில் மாற்றமேற்படுதல், மனநிம்மதிக்காக யாத்திரைகளில் ஈடுபடுதல். தேவாலயங்களுக்குப் பொருட்களைச் செலவுசெய்தல் தருமம் செய்தல்.

### கன்னி

இவர்களுக்கு மிகவும் சோதனையான காலமாகும். 3-ல் வியாழனும் அட்டமத்திற் சனியும் இருப்பதிஞல் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். மனக்கிலேசம், தோல்விகள் ஏற்படுதல் சகோதரங்களோடு பழிப்பகை, தேகபலக்குறைவு கால்கைகளிற் சோர்வேற்படுதல், பதவிகளை விட்டு வெளியேறுதல், குடும்பப் பிரிவு, சீவனும்ச வழக்குகளில் ஈடுபடுதல், மறியற்சாலைகளை நிரப்பல், மானபங்கமேற்படுதல், களஸ்திர ஜாதக, குடும்ப நோய்கள் வியாழசனி வழிபாட்டிஞல் நன்மைகள் பெறலாம் தெசைபுத்தி சித்திரங்களையும் ஆராய்க.

### துலாம்

அதிர்ஷ்டங்கள் கிடைத்தல், தனவரவு, அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களில் பரிசில்கள் கிடைத்தல், வாகனங்கள் கிடைத்தல், இல்லச் ... நடன சங்கீத அரங்கேற்றங்கள் சமாதான நீதிபதியாகவும் தர்மகர்த்தாவாகவும் தவிவகித்தல், புத்திரப் பேறு. நல்ல நெல்விளைவு, விவசாய மேன்மை.

### விருச்சிகம்

சரீரமெலிவு. மன அமைதிக்குறைவு, வயிறு, குடல் சம்பந்தமான ரோகங்கள், வசதி குறைந்த இடங்களில் வாழ்தல் இல்லச்சுகக்குறைவு சத்துருஉபத்திரவம், வழக்குவம்பு, வீண்பழிக்குரோதம் விஷஜெந்துக்களிஞற் தீண்டப்படுதல். தேகத்தழும்புகள், நித்திரைக்குழப்பம்.

### தனுசு

புத்திரசுகக் குறைவு, மன அமைதிக் குறைவு, சோம்பல், அந்நியதேச சஞ்சாரம், நித்திரைக் குழப்பம் வீண்பழிக்குரோதம் வழக்கு வஞ்சனைகளிஞற் பொருட்செலவு பணக் கொடுக்கல் வாங்கல்களிஞற் சீரழிவு யாத்திரைகளில் ஈடுபட விருப்பம். பிதிர்வழிச் சஞ்சலம்.

### மகரம்

மூத்த சகோதரர்களிஞலும், பெரியோர்களிஞலும் அறிஞர்களிஞலும் நன்மைகள், லாபம், செய்தொழில் முன்னேற்றம், விவாகப் பேறு, மனைமங்கல வாழ்க்கை ஆடையாபரணச் சிறப்பு. சுற்றத்தவர்களிடையே சுப காரியங்களை முன்னின்று செய்தல், காணிகள் வாங்கி சழனிகளாக்கல், தென்னஞ்சோலைகள் ஆக்கல் கடல்படு திரவிய வியாபார பலிதம், உத்தியோக உயர்ச்சி, இக்காலம் இராணுவம் கடற்படை. நகரபாதுகாவலர் உத்தியோகத்தரிலனேகர் பதவி உயர்வு பெறுவர். இலங்கைப் போக்குவரத்துச் சபை, புகையிரதப்பகுதி ஊழியர் இவர்களும் நன்மையடைவர். நீர்ப்பாசன பொறியியல், கட்டிட என்சினியர்கள், அளவையாளர்கள் மிக நன்மை பெறுவர் கீழ்த்தர அடிப்படைச் சம்பளம் பெறும் ஊழியர்கள் மேல்தரப் பதவிகளில் நியமனம் பெறுவர்.

### கும்பம்

இடமாற்றம், தொழில் மாற்றம். உத்தியோக மாற்றம், வாழ்க்கைச் சிக்கல்கள் உண்டு. ஏதாவது ஒருவகையால மாற்றமுண்டு ஆயினும் சனி கோட்சரம் நன்கமைவதிஞல் தீமைகுறைவு. அகாலபோசனம், புதுவகையான நோய்கள் அதாவது வைத்தியத்தில் கட்டுக்கடங்

... எழுதப்பட்டவை.

## மூதாட்டி மரணம்

பருத்தித்துறை, செவ். கரவெட்டியிலுள்ள கனுவில் பகுதியில் மூதாட்டி ஒருவர் படுக்கையில் நாக பாம்பு தீண்டியதால் மரணமானுர்.

... பாத்திரத்தில் கட்டித் தொங்கும். நெற்றி மீது எண்ணெய் மெதுவாகத் தொடர்ந்து ஊற்றும். சாதாரணமாக இரண்டொருமணி நேரம் இச்சிகிச்சை நீடிக்கும். 'பிஸிலி' என்ற முறைப்படி, விசேஷமாகத் தயா...

... செழுத் தோதிஞல்,
பொருந்து நோய்பிணி
போகத் துறப்பதோர்,
மருந்துமாகுவர் மன்னு
மார் பேறரே.
—அப்பர் அடிகள்.

---

இரு தினங்களாக மழை இல்லை

# பல இடங்களில் இன்னும் வெள்ளம் தேங்கி நிற்கிறது

யாழ்ப்பாணம், புகன்

யாழ். மாவட்டத்தில் கடந்த இருதினங்களாக மழைவெறித்துள்ளது.வெள்ளத்திஞல் பாதிக்கப்பட்ட இடங்கள் சீர்பட்டுவருகின்றன.

மழையிஞல் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து எமது வெளியூர் நிருபர்கள் அறிவித்த விபரங்கள் வருமாறு:

### கிளிநொச்சியில்

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள குளங்களின் நீர்மட்டங்கள் உயர்ந்துள்ளமையால் வெள்ள அபாயமேற்பட்டுள்ளது. நீர்ப்பாசன இலாகாவினரின் தகவலின்படி இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 24 அடி 6 அங்குலமாக உயர்ந்திருந்தது.

விஸ்வமடுக்குளம் முற்ருக நிறைந்துவிட்டதாகவும் நீர்மட்டம் 9 அடியிலிருந்து 18 அடி 4 அங்குலத்திற்கு உயர்ந்துள்ளதாகவும் நீர்ப்பாசனப்பகுதியினர் என்னிடம் தெரிவித்தனர்.

கல்மடு 21 அடிக்கு நீர் மட்டம் உயர்ந்திருந்தது.

அக்கராயன் குளத்தின் மட்டம்கூட 19 அடிக்கு உயர்திருந்தது. மற்றும் வன்னேரி, உடையார்கட்டுக் குளங்கள் முறையே 10 அடிக்கு நீர் மட்டம் அதிகரித்திருந்தது.

இக்குளங்களின் நீர்மட்ட விபரங்களை அறிந்த நீர்ப்பாசன அதிகாரிகள் சகல பிரிவுகளையும் சென்று கண்காணித்து வருவதாகவும் பாதுகாப்புக்கான தம்மாலான துரித முயற்சிகளை மேற்கொள்வதாகவும் என்னிடம் கூறினுர்கள்.

### சுழிபுரத்தில்

தொல்புரம் மேற்குப் பகுதியைச் சேர்ந்த கொட்டையாவத்தை பகுதி ஒரே வெள்ளக்காடாக காட்சியளித்தது. ஒழுங்கைகள் வளவுகள் ஒரே வெள்ளமயமாகவிருந்தன. தொல்புரம் அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள பகிரங்க வீதி வெட்டப்பட்டு வெள்ளம் பாய்ந்தது. தொல்புரம் பகுதியில் சிறுபான்மைத் தமிழர் வாழும் பகுதிதான் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. சுழிபுரம் மேற்குப் பகுதி ஒரேவெள்ளக்காடாகவிருந்தது. வெள்ளம் ஓட முடியாமல் தேங்கிநிற்கிறது. பயிர்கள் எல்லாம் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன. திருவடிநிலை கடலை நோக்கி வெள்ளத்தைபோக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சகல இடங்களையும் பார்வையிட்டார்.

மாதகல் வயல்கள் ஒரே கடல்போல் காட்சியளித்தன. நெல்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தன. மாதகல் - பண்டத்தரிப்பு பகிரங்க தெரு வெள்ளத்தால்மூடிக்கிடந்தது. பண்டத்தரிப்பு வடலியடைப்பு பகிரங்க வீதி இரண்டு இடங்களில் வெட்டப்பட்டுள்ளது. இதஞல் போக்குவரத்து வாகனங்கள் வீதியால் செல்ல முடியாமலிருந்தது. வடலியடைப்பு பகுதியில் ஒரே வெள்ளக்காடாகவிருந்தது.

### முல்லைத்தீவில்

அம்பன்நிருபர்

முல்லைத்தீவுப் பகுதியில் சில தினங்களாகத் தொடர்ந்து பெய்யும் மழையிஞல் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மாங்குளம் முல்லைத்தீவு ரோட்டில் 4அடி வெள்ளத்துக்குமேல் தண்ணீர் மேவிப்பாய்கின்றது. பெருந்தொகையான கமங்கள் அழிந்து விட்டன பள்ளக்கையில் உள்ள வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் மக்கள் குடிபெயர்ந்துள்ளனர், முல்லைத்தீவு சாராயத் தவறனை தண்ணீரில் மிதந்தது கேராவில் பேராறு பெருக்கெடுத்ததால்பரந்தன் புதுக்குடியிருப்பு, பாதையால் பஸ்சேவை நடைபெறவில்லை. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நாயாறு பஸ் மாங்குளம் ஊடாகவே சேவை செய்தது இரணைமடு வவனிக்குளம் தேராவில் குளம் கலிங்கு உடைத்துப் பாய்ந்தது. நெத்தலியாறு, நாவலாறு புதுக்குடியிருப்பு ரோட்டைமேவிப் பாய்ந்தது. 0 0 0

அல்லைப்பிட்டி நிருபர்

வேலணை பெருங்குளம் உடைப்பெடுத்தது. இதஞல் இப்பகுதிவாழும்மக்கள் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர், மழை காரணமாக தீவுப்பகுதி போக்குவரத்து சேவைகள் அடிக்கடி ஸ்தம்பித்துப்போகின்றன.தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும் மழையில் நெற்பயிர்களும் புகையிலைக்கன்றுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. தீவுப் பகுதியில்மலேரியா நோயின் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகின்றது.

## கும்பாபிஷேகம்

வவனியா, செவ்வாய்

வவனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய நூதனப் பிரதிஷ்டை கும்பாபிஷேகம் இம்மாதம் 4-ம் திகதி நடைபெறஇருக்கிறது.

நேற்றுமுன் தினம்ஆசார்ய வரணத்தோடு ஆரம்பித்த வைபவம் தொடர்ந்து கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, யாக ஆரம்பம் ஹோமம் ஆகிய கிரியைகள் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும். அன்று யாக பூர்ணுகுதியும் நூதனப் பிரதிஷ்டை மகாகும்பாபிஷேகமும் நடைபெறும். 18-ந் திகதி வரை 15 தினங்களுக்கு அபிஷேகமும் விசேஷ பூஜையும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org